விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 வைகாசி: 31 துல் ஹஃதா: பிறை: 20 இதழ்: 122
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14-06-1990

## கிழக்குப் பகுதிக்கு 3000 படை வீரர்

(கொழும்பு)

மூவாயிரத்தும் அதிகமான இராணுவத்தினர் கிழக்குப் பகுதிக்கு அனுப்பி வைக்கப் பட்டிருப்பதாகதகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவம் கிழக்குப் பகுதியில் ஹெலிகொப்டர்களின் உதவியுடன் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுத்து வருவதாக கொழும்பிலுள்ள ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்காமைக்கு அரசாங்கமே காரணம்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கப்படைகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் கடைப் பிடிக்கப்படாமைக்கு அரசின்

(8-ம் பக்கம் பார்க்க)

# தொடர்ந்தும் ஷெல், ஹெலி, விமானத் தாக்குதல்

# அம்பாறை மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வெட்டிக் கொலை!

## 37 புலிகள் வீர மரணம் படையினர் பலர் பலி

(யாழ்ப்பாணம்)

**"அம்பாறையில் பிள்ளையார் கோயில் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளதுடன் நூற்றுக்கும் அதிகமான தமிழ் மக்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்" என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று வெளியிட்டுள்ள மட்டு - அம்பாறை சம்பவங்கள் தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- "கடந்த மூன்றுநாட்களாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் 37 விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ளனர். சிங்கள இராணுவத்தின் தரப்பில் பலத்த உயிர்ச்

(8-ம் பக்கம் பார்க்க)

## பெரும் தாக்குதல் முஸ்தீபு?

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை நோக்கிப் பெருமளவு படையினர் விமானத்திலும், ஹெலிகொப்டர்களிலும் விரைவதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேநேரத்தில் மட்டக்களப்பில் நேற்றுக் காலை நடைபெற்ற தாக்குதற் சம்பவம் ஒன்றில் நூற்று ஐம்பது பொலிஸார் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. நேற்றுக் காலை இந்த நகரின் பல பகுதிகளிலும் குண்டுச் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், 'ஹெலி' சூட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

மேற்படி தாக்குதலில் கொல்லப்பட்ட பொலிஸார் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களே என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உதவிப் பொலிஸ் அதிபர் கடத்தப்பட்டார்

அம்பாறை மாவட்ட உதவிப் பொலிஸ் அதிபர் (ஏ. எஸ். பி.) ஜீப் வண்டியுடன் கடத்தப்பட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜீப் வண்டியில் பொலிஸாருடன் சென்று கொண்டிருந்தபோது காட்டுப் பகுதியில் வைத்து உதவிப் பொலிஸ் அதிபரும், ஜீப்பில் சென்ற பொலிஸாரும் ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

[8ம் பக்கம் பார்க்க]

## 17 பொலிஸ் நிலையங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், முருங்கன், வவுனியா, ஒட்டிசுட்டான் உட்பட பலபகுதிகளையும் உள்ளடக்கி 17 பொலிஸ் நிலையங்கள் தற்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கிறது.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் இடையில் நேற்றுமாலை மூன்றாவது நாளாக தொடர்ந்து சண்டைகள் நடைபெற்று வருவதாக கிழக்கு மாகாணச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டபடி இருபகுதியினரிடையும் நேற்று யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு கொண்டு

(8ம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தி. மு. க. அனுதாபம் இந்திய அரசுக்கு விரோதமானதல்ல!

### பத்திரிகையாளர் மத்தியில் கருணநிதி

(சென்னை]

விடுதலைப் புலிகள் மீது திராவிட முன்னேற்றக் கழகம் அனுதாபம் வைத்திருப்பது இந்திய அரசுக்கு விரோதமான நிலையில் உள்ள அனுதாபம் அல்ல என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. மு. கருணநிதி தெளிவு படுத்தினர்.

நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு விளக்கினர்:

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்கள் எதுவும் செயல்படவில்லை என திட்டவட்டமாக அவர் தெரி

(8-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு நிலைமை: பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

[கொழும்பு]

வன்செயல்களையும், ஆக்கிரமிப்பையும் முடிவுக்குக் கொண்டுவருவது என்ற வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் வாக்குறுதி அளித்திருந்த போதிலும், வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலையில் மேலும் சீர்குலைந்து விட்டது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் இருந்து ஜனுப் ஹமீத் கொழும்புக்குப் புறப்

(8-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா பொலிஸ் நிலைய ஆயுதங்கள் படையினரால் மீட்பு பொலிஸார் வெளியேற்றம்

[யாழ்ப்பாணம்]

வவுனியா பொலிஸ் நிலையத்திலுள்ள ஆயுதங்கள் அனைத்தும் நேற்று இராணுவத்தினராலும், ஆகாயப் படையினராலும் எடுத்துச் செல்லப்பட்டதைதொடர்ந்து அங்கிருந்த சிங்களப் பொலிஸார் யாவரும் வெளியேறி விட்டார்கள்.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திலுள்ள பொலிஸார் விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்துள்ளார்கள்.

[153]

## படைப் பிரிவுகளுக்கு ரஞ்சன் விஜயம்

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிற் துறை அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன முகத்துவாரம் படை முகாமிலுள்ள பல்வேறு படையணிப்பிரிவுகளின் தலைமையகத்தைப் பார்வையிட்டார்.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல ஹமில்டன் வணசிங்க, படைப்பிரிவுத் தளபதி பிரிகேடியர் பி. பரணகம, பிரிகேடியர் பி. ஏ. கருணதிலக, கவசப்படை அணியின் தலைவர் லெப். கேர்ணல் எம் ஆர். மொரெங்கே புலன் விசாரணைப் படைப்பிரிவின் ஏவுனர் ஆகியோரும் அமைச்சரின் இவ்விஜயத்தின் போது சமூகமளித்திருந்தனர்.

## யாழ். பொலிஸ் நிலையத்தில் மாகாண பொலிஸ் தெரிவு நேர்முகப் பரீட்சை நடைபெறவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலயத்தில் நேற்று நடைபெறவிருந்த மாகாணப் பொலிஸ் தெரிவிற்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணம் பொலிஸ் இயங்காத காரணத்தால் நடைபெறவில்லை.

நேற்று இரண்டாவது நாளாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலயம் இயங்கவில்லை. அங்கு கடமை புரிந்த சகல தரப்பு பொலிஸ் உத்தியோகத்தர்களும் கடமைக்குச் செல்லவில்லை.

எனினும் யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பகுதியினர் பொது மக்களின் நன்மை கருதி, ஆஸ்பத்திரி தொடர்பான முக்கிய வேலைகளைக் கவனிப்பதற்காக கடமையிலீடுபட்டனர்.

[56]

## வரி விளம்பரம்

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

இணுவில், சுன்னுகம், தாவடி, மானிப்பாய் (மாணவர் வசதி கருதி) யாழ்ப்பாணம் புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் புலமைப் பரிசில் மாதிரிப்பரீட்சை (ஏழாவது) 17-06-90 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10-30 மணிக்கு எமது நிறுவனத்திஞல் நடாத்தப்படும். பெறுபேறுகள் விஞத்தாள் விளக்கம் 24-06-90 ஞாயிறு பி. ப. 3-30 மணியளவில் புதிய கல்வி நிலைய ஆசிரியரிஞல் மேற்கொள்ளப்படும். முற்கூட்டியே பதிவுசெய்யவும். ''எவரஸ்ற் இன்ஸ்ரிரியூற்'' இணுவில்.

(சி–3980)

## சனசமூகநிலையங்கள் மக்கள் முன்னேற்றத்திற்கு துணைபுரிய வேண்டும்

(வட்டுக்கோட்டை)

''சனசமூக நிலையங்கள் மக்கள் ஒவ்வொருவரையும் கல்வி, கலை, கலாசார பொருளாதாரத்துறைகளில் முன்னேற்றமடையச் செய்யவேண்டும். என்னென்ன வகையில் பொருளாதாரத்தை வளர்க்கமுடியுமோ அவற்றை மக்களுக்குத் தெரியப்படுத்தி - வழிகாட்டி அவர்கள் முன்னேறத் துணைபுரியவேண்டும்.''

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் நடைபெற்ற வட்டுக்கோட்டை உப அலுவலகப் பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி தலைமையுரை நிகழ்த்திய சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ராணி சின்னத்தம்பி மேற்கண்டவாறு கூறினுர்.

வட்டுக்கோட்டை உப அலுவலகப்பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். திருமதி ராணி சின்னத்தம்பி தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது.

பினதங்கிய கிராமங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை வளம்பெற தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க சனசமூக நிலையங்கள் முன்வர வேண்டும். எதிர்காலத்தில் நல்லதொரு சமுதாயம் உருவாக வழிகாட்டுவதும் சனசமூக நிலையத்தின் கடமையாகும்.''

திரு. கே. மயில்வாகனம், திரு. வே. மாரிமுத்து தலைவர் சைவப்புலவர் நா. க. தங்கரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும்பலரும் உரையாற்றினர்.

(139)

## சனசக்தி திட்டத்தை மக்கள் உணர்ந்துள்ளனர்

(அக்கரைப்பற்று)

''ஒவ்வொருவரும் சொந்தக் காலிலேயே நிற்கவேண்டும். அதற்கு உதவியாகவே சனசக்தித் திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்தத்திட்டத்தை குறுகியகாலத்திலே நீங்கள் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. முக்கியமாக உங்கள் சுற்றுடல் சுத்தமாக இருக்கிறது, ஒவ்வொருவரும் சுய தொழில் ஒன்றில் கவனம் செலுத்துகிறீர்கள். இவற்றை எல்லாம் கவனிக்கும் பட்சத்தில் இந்த திட்டத்தின் மூலம் கிடைக்கஇருக்கும் நன்மையை முழுமையாக உணர்ந்துள்ளீர்கள் என்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

''அம்பாறை மாவட்டத்தில் முழுமையாக தமிழ் மக்கள் வாழும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சனசக்தித் திட்டம் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள மறுமலர்ச்சியைக் காணும்போது மகிழ்ச்சியடைகிறேன்''.

இவ்வாறு திருக்கோயில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விஞயகபுர வித்தியாலய மண்டபத்தில் சனசக்தி அணியினரின் சுயமுயற்சியிஞல் உற்பத்தி செய்யப்பட்டிருந்த கைப்பணிப் பொருட்காட்சியை சனசக்தி ஆணையாளர் திரு. சுசில் சிறிவர்த்தன திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அம்பாறை மாவட்டத்திற்கு திருக்கோயில் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் சனசக்தி நடவடிக்கைகள் ஒரு உரைகல்லாகவே அமைந்திருக்கிறது. அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஆறு வருடங்களுக்குப் பிறகு உயர் மட்ட அதிகாரிகள் கரையோரப் பகுதிக்கு விஜயம் செய்தது இதுவே முதல்தடவை என்று சொல்லவேண்டும். இப்பகுதியில் சனசக்தித்திட்டத்தின் கீழ் சுயதொழில் முயற்சியில் முன்னணியில் நிற்பவர்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 9 பேருக்கு தலா 10,000 ரூபா கடன் உதவியாக காசோலைகளையும் ஆணையாளர் திரு. சுசில் சிறிவர்த்தன வழங்கினுர். இந்த மாதத்தில் மேலும் பல உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளுக்கு சனசக்தித் திட்டம் விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

(142)

# வி. சீ. கந்தையா காலமானுர்

## மட்டக்களப்பு கலாசார பேரவையிஞல் 'மகாவித்துவான்' பட்டம் பெற்றவர்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பின்முதுபெரும் தமிழறிஞரான 'மகாவித்துவான்' பண்டிதர் வி. சீ. கந்தையா(வயது 70) நேற்றுமுன்தினம் மட்டுநகரில் காலமானுர். சிலகாலமாக இவர் நோய்வாய்ப்பட்டிருந்தார்.

சுவாமி விபுலாநந்தர் அடிகளார், புலவர்மணி,ஏ.பெரிய தம்பிப்பிள்ளை, குஞ்சித்தம்பி ஆகியோரின் மாணவரான இவர்' தில்லை மண்டூர்' என்று சிறப்பிக்கப்படும் மண்டூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்திலும் பயின்று பண்டிதர் பட்டம்பெற்ற வி. சீ. கந்தையா, அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டமும், அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் பி. ஓ. எல். பட்டமும் பெற்றவர். ஆசிரிய சேவையில் வாழ்வின் பெரும்பகுதியைக் கழித்தவர். 1970இல் மட்டுநகர் சிவானந்த வித்தியாலயத்தின் அதிபராகவும் பணிபுரிந்தவர்.

கல்விமான்களுள் ஒருவரான 'மகாவித்துவான்' வி. சி.கந்தையா வடக்கே வெருகல் ஆறுமுதல், தெற்கே குழுணை ஆறுவரை பரந்துகிடக்கும் மட்டக்களப்பு மாநிலத்தின் வரலாற்றை 'மட்டக்களப்பு தமிழகம்' எனும் தலைப்பில் ஆராய்ந்து நூலாக வெளியிட்டவர்.

மட்டக்களப்பு சைவக் கோயில்கள், கண்ணகி வழக்குரை. அனுவுருத்தரன் நாடகம் முதலானவற்றை எழுதியும் தொகுத்தும் வெளியிட்ட மகாவித்துவான் வி. சீ. கந்தையா அவர்களின் 'பாஞ்சாலி சபதம்' எனும் நூல் லண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களுக்கான பாடநூலாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்தமாதம் மட்டக்களப்பு கலாசாரப் பேரவையிஞல் மகாவித்துவான் பட்டமளிக்கப்பட்டு இவரும் இவரது பாரியார் திருமதி கங்கேஸ்வரி கந்தையாவும்கௌரவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(153)

## வட்ட அவை நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வட்ட அவை தெரிவு கடந்த திங்கட்கிழமை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

பண்டத்தரிப்பு பிரதேச பொறுப்பாளர் திரு. சிவா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வலிகாமம் பிரிவு பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைப் பீட செயற்குழு உறுப்பினர் திரு. செங்கதிர் ஆகியோர் கலந்துகொண்டு சிற்றூரவைகள், வட்ட அவைகள் ஆகியவற்றின் கடமைகள், செயற்பாடுகள் பற்றி விளக்கமளித்தனர். சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வட்ட அவை நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆ. சவரிப்பிள்ளை
உபதலைவர்: ந. சிவபாதம்,
செயலாளர்: சி. ஜோன்பப்ரிஸ்ட், உபசெயலாளர்: ச. செல்வரத்தினம், பொருளாளர்: திருமதி செ. தனபாலசிங்கம் வட்ட அவை உறுப்பினர்களாக எஸ். பி. ஜேசுதாசன், வி. கற்கண்டு இ. சிவசுப்பிரமணியம், அ. யோகராசா, நா. பூரணலிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

(72)

## 15 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் — சென். பற்றிக்ஸ் கொக்குவில்இந்து 23-ல் மோதுகிறது

[யாழ்ப்பாணம்]

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் 15 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டி. சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. சென். பற்றிக்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடி 83 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்து துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் 82 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியில், சென். பற்றிக்ஸ் கூடுதலானபுள்ளிகளைப் பெற்றதைத் தொடர்ந்து கொக்குவில் இந்துக்கல்லூரியுடன் சென். பற்றிக்ஸ் 23ம் திகதிமோதிக்கொள்ளும்.

(153)

## பெற்ருேர் பிள்ளைகளின் கல்வி ஒழுக்கங்களில் அக்கறை காட்ட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

பாடசாலையிலும்கூடுதலான நேரம் மாணவர் வீட்டிலே தங்குவதால் ஆசிரியர்களிலும் பார்க்க பெற்ருேரே பிள்ளைகளின் கல்வி, நல்லொழுக்கம் பண்பாட்டு வளர்ச்சிகளில் பொறுப்புணர்ச்சியுடன் அக்கறை செலுத்த வேண்டும். பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்த்தால் மட்டும்போதாது. பிள்ளைகளின் கல்வி நல்லொழுக்க வளர்ச்சிகளிலும் ஆசிரியர்களுடன் சேர்ந்து அக்கறை செலுத்தவேண்டும்.

இவ்வாறு கொக்குவில் கொத்தணி அதிபர் அ. பஞ்சலிங்கம் கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாலடத்தில் நடைபெற்ற பெற்ருேர் ஆசிரிய தினத்தில் உரையாற்றும்போது கூறினுர்.

தற்போதைய யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கல்வி மேம்பாட்டுத் திட்டத்திற்கமைய இன்றைய நிகழ்ச்சி நடைபெறுகின்றது என்றும் ஆசிரியர்களைப் பெற்ருேரும் பெற்ருேரை ஆசிரியர்களும் குறைகூறியபடி இருக்காமல் சுற்றல், கற்பித்தல் முயற்சிகளுக்கு இக்கருத்தரங்கு பலனளிக்குமென்றும் அதிபர் கா. கணேசதாசன் தலைமையுரையில் தெரிவித்தார்.

ஆசிரியை திருமதி ச. பற்பநாதன், கவிஞர் திரு. முருகசூரியன், திரு க. தமிழ்ச்செல்வன் ஆகியோர் உரையாற்றினர். திரு. கு. மகாலிங்கம் நன்றி கூறினுர்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


### 5வது பிறந்த நாள் வாழ்த்து
செல்வி அ. சமர்த்தனி

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைச் சேர்ந்த அற்புதவிநாயகன் – வசந்தா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி சமர்த்தனி (இன்று) 14-06-90ல் தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ருர். இவரை அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சின்னமாமா, பெரியமாமா, சித்தப்பா ஆகியோர் மாதகல் நுணசை முருகன் அருளால் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றனர்.

(சி 3985)


## மகாநாடு

(மட்டக்களப்பு)

வடக்கு கிழக்கு மாகாண சபையின் புனர்வாழ்வு நெறிப்படுத்தற் குழுவின் 15வது மகாநாடு ஜூலை மாதம் 7ம் திகதி வவுனியாவில் நடைபெறும்

திருமலைக்கு வெளியே நடைபெறும் 2வது மகாநாடு இதுவாகும்.

திருமலைக்கு வெளியே 14வது மகாநாடு அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

(121)


### தேவை

நிறுவனம் ஒன்றிற்கு இரவில் பொறுப்பான பணியை செய்வதற்கு அனுபவமுள்ளவரும், பொறுப்பும் கடமை உணர்ச்சியும் உள்ள பணியாள் ஒருவர் தேவை. சகல விபரங்களுடன் 20-06-90க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் ஏ 804 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(ஏ 804)


## தலைவராகத் தெரிவு

(பண்டத்தரிப்பு)

சில்லாலை சிற்றூர் அவைத் தலைவராக திரு. எஸ். பி. ஜேசுதாசன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார், செயலாளராக செல்வி பிறக்சீட் அந்தோனிப்பிள்ளையும், பொருளாளராக திரு. எலியாஸ் கைத்தாம்பிள்ளையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(72)


### பனந்தும்புத் தூரிகைகள்

பனந்தும்பிஞல் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு தேவைகளுக்குமான தூரிகைகள் பனை அபிவிருத்திச் சபையின் சகல கற்பகம் விற்பனை நிலையங்களின் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றன.

பனந்தும்புத் தூரிகைகளைப் பாவிப்பதன் மூலம் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவியுங்கள்.

தலைவர்.
ப. அ. சபை.

(ஏ 806)

### கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம் கிளிநொச்சி.

### வெற்றுச் சாக்கு கேள்வி கோரல்

மேற்படி எமது சங்கத்தில் 19000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கு உண்டு. பெற விரும்புவோர், மீளளிக்கப்படும் பணமாக ரூபா ஐநூறும் (500-00) ம், கேள்விப் பத்திரத்திற்கு ரூபா ஐந்தும் (5.00) ம் சங்கத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளவும். சங்கத்தால் வழங்கப்படும் கேள்விபபத்திரம் மூலம் 23-06-90ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ''பொதுமுகாமையாளர். கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி'' எனும் விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் கையளிக்கவும். கடித உறையின் மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு கேள்வி கோரல்'' என எழுதப்படவேண்டும்.

பொதுமுகாமையாளர்

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.

(ஏ-810)

## சோவியத்தில் பத்திரிகைத் தணிக்கை

# தடை நீக்கப்பட்டது!

## 40 வருடகாலச் சரித்திரம் மாறுகிறது

(மாஸ்கோ)

சோவியத் யூனியனில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளதுடன் தணிக்கை முறையும் விலக்கப்பட்டுள்ளது. கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இங்கு இத்தடைகள் அமுலில் இருந்தது.

சோவியத்தில் ஏற்பட்டு வரும் சீர்திருத்த மாற்றங்களுக்கு அமையவும், குடியரசுகளின் அரசுக்கு எதிரான எதிர்ப்பு உணர்வுகளும், கம்யூனிஸ எதிர்ப்பும் அதிபர் கொர்பச்சேவை இந்தத் தடை நீக்க நடவடிக்கைகளுக்குத் தூண்டி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தடை நீக்க அறிவிப்பு நேற்று முன்தினம் அதிபர் மாளிகையிலிருந்து வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பை அனைத்துப் பத்திரிகைகளும், பல பொதுஸ்தாபனங்களும் வரவேற்றுள்ளன.

கடந்த பல வருடங்களில் சோவியத்தில் 30க்கும் மேற்பட்ட பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தடைசெய்யப்பட்டுள்ளதும், சகல செய்திகளும் தணிக்கை முறைக்கு உட்படுத்தப்பட்டுவந்ததும் குறிப்பிடத்தக்கது.

அதிபர் கொர்பச்சேவின் இந்த நடவடிக்கை அரசுக்கு எதிரான பல விமர்சனங்களை எதிர்காலத்தில் பத்திரிகைகள் வெளியிட ஓர் சந்தர்ப்பம் வழங்கியுள்ளதாகப் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (சி)

## பவுஸரில் நெரிபட்டு மரணம்

(யாழ்ப்பாணம்)

தண்ணீர் பவுஸரினால் நெரிபட்டு அதன் கிளினர் ஒருவர் ஸ்தலத்திலே மரணமானார்.

இச்சம்பவத்தில் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த மாணிக்கம் குணசேகரம் (வயது 34) என்பவரே பலியானவராவர். (56)

## ஓட்டோ - பஸ் விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற பஸ் — ஓட்டோ விபத்தில் பஸ் பிரயாணிகள் பலர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களில் கொக்குவிலைச் சேர்ந்த பொன்னையா நாகேஸ்வரராவ் (வயது 30) யாழ்ப்பாணம் டேவிட் றோட்டைச் சேர்ந்த நாகேஸ்வரி சுந்தரலிங்கம் (வயது 38) ஆகியோர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56]

## பலஸ்தீனிய தாயகப் பகுதிகளை பார்வையிட

# இஸ்ரேல் அரசு ஐ. நா. செயலருக்கு அழைப்பு

[டெல்அவிவ்]

**இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பலஸ்தீனிய தாயகப் பகுதிகளை பார்வையிட ஐ. நா. பொதுச் செயலர் திரு. ஜாவியர் பெரஸ் டி கியூலருக்கு இஸ்ரேல் வலதுசாரி அரசு அழைப்பு விடுத்துள்ளது. எதிர்பாராத இந்த அழைப்பால் பலஸ்தீனிய பகுதிகளில் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்துமா என்ற கேள்வி எழுந்துள்ளது.**

பலஸ்தீனிய விவகாரம் தொடர்பாக அமெரிக்கா தெரிவித்த யோசனையால் கடந்த ஏப்ரல் மாதம் இஸ்ரேலில் ஆளும் கட்சிக்கிடையில் பிளவு ஏற்பட்டது. இதையடுத்து அண்மையில் பிரதமர் யக்ஷர் ஷமீர் தலைமையிலான புதிய அரசு அமைந்துள்ளது.

தீவிர கிறிஸ்தவ வலதுசாரி கட்சியான லிக்குவிட் கட்சியும் பிரதமருக்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளது. நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் திரு. ஷமீர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஐ. நா. செயலர் விஜயம் செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

இதன்போது இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிற்குள் உள்ள பலஸ்தீனிய தாயகப் பகுதிகளையும் ஐ. நா. செயலர் சென்று பார்வையிடவும் இஸ்ரேல் அரசு அழைப்பு விடுத்துள்ளது. இந்த அழைப்பு அரசியல் அரங்கில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் இராணுவத்தின் பல அடக்குமுறை கொடுமைக்குள்ளாக்கப்பட்டு வரும் பாலஸ்தீனியர்கள் இச்சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்தக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் ஐ. நா. செயலரை சுதந்திரமாக பலஸ்தீனியரை சந்திக்க இஸ்ரேல் அனுமதிக்குமா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. (சி)

## காஷ்மீரில் கடும்மோதல்

# 30 பேர் பலி

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீரில் மீண்டும் கடும் சண்டை நடைபெறுகிறது. கடந்த இரு தினங்களாக இந்திய இராணுவத்திற்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான சண்டையில் 30 பேர் வரை கொல்லப்பட்டனர்.

ரோந்து சென்ற படையினர் மீது தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கியதில் 13 பேர் ஸ்தலத்திலே பலியானதாகவும் இதையடுத்து நடந்த சண்டையில் பத்திற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜம்மு-காஷ்மீரின் பல முக்கிய நகரங்களில் தற்போது 24 மணிநேர ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு படையினர் கடும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். பல தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜம்மு-காஷ்மீரில் மீண்டும் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகிறதாம். (சி)

## லைபீரியாவில் யுத்த நிறுத்தம்

# அரசு - கெரில்லா இணக்கம்

### கடும்சண்டை தொடர்கிறது

(மொன்ருவி)

லைபீரியாவில் அரசு படைகளுக்கும் கெரில்லாக்களுக்குமிடையில் உடனடி யுத்த நிறுத்தம் ஏற்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது, எனினும் பல இடங்களிலும் தற்போது கடும் சண்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாட்டின் கிழக்குப் பகுதியில் கெரில்லாக்கள் வசமுள்ள விமானநிலையத்தை கைப்பற்ற அரசு படைகள் கடும் யுத்தத்தில் ஈடுபட்டு வருவதாகவும் எனினும் கெரில்லாக்களின் கடும் எதிர்ப்பு அரசுபடைகளை பின்வாங்கச் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் போரை நிறுத்த சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்குமுகமாக உடனடி யுத்த நிறுத்தத்திற்கும் இரு தரப்பும் இணக்கம் கண்டுள்ளன. பேச்சுக்கள் தற்போது ஆரம்பமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதற்கிடையில் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் இதில் சுமார் 30 பேர் வரை கொல்லப்பட்டதாகவும் கிராமப்புறங்களில் பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு

# நிதி ஒதுக்கீடு

(மட்டுவில்)

சாவகச்சேரி ஆஸ்பத்திரி அபிவிருத்தி வேலைகளைத் தொடர்ந்து புதிய சத்திர சிகிச்சை நிலையம், இரத்தவங்கி,

(5ம் பக்கம் பார்க்க)

## இயற்கை போன்று

## செயற்கைப் பனிக்கட்டி

(டோக்கியோ)

இயற்கை பனிக்கட்டி போன்றதான செயற்கை பனிக்கட்டியை யப்பான் நிறுவனம் ஒன்று உருவாக்கியுள்ளது. ஆனால் இயற்கைப் பனிக் கட்டியைபோல இது உருகி ஓடுவதில்லை.

பனியில்லாத காலத்தில் பனிக்கட்டியில் சறுக்கி விளையாடுவதன் மூலம் பரவசமடைவோர் ஆவலை பூர்த்திசெய்ய இச்செயற்கை பனிக்கட்டி உதவும்.

பளிங்குகளைக் கொண்டு மற்றுமொரு வகையான செயற்கை பனிக்கட்டிகளை யப்பான் நிறுவனம் தயாரித்துள்ளது. (அ)

## உதைபந்தாட்ட போட்டியில் குழப்பம்

# ஐந்துமேற்குஜெர்மனியர்களை

# வெளியேறுமாறு உத்தரவு

(ரோம்)

இத்தாலியில் நடைபெற்று வரும் உலக கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் விளையாட்டரங்கில் பெரும் குழப்பத்தை விளைவித்த ஐந்து மே. ஜெர்னியர்களை உடனடியாக இத்தாலியை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறு மே. ஜெர்மனிக்கும் - யூகோஸ்லாவியாவுக்குமிடையில் நடைபெற்ற போட்டியின் போது இவர்கள் மைதானத்தில் பெரும் குழப்பத்தை விளைவித்தார்கள். பொலிஸார் உடனடியாக இவர்களை கைதுசெய்து மறுநாள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இத்தாலியை விட்டு உடனடியாக இவர்கள் வெளியேற வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. இதைமீறும் பட்சத்தில் 2 வருட சிறைவாசம் அனுபவிக்க நேரிடுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இங்கு வேறு பல போட்டிகளிலும் குழப்பங்கள் விளைவிக்க முயன்ற வெளி நாட்டவர்கள் பலர் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### மணிவாக்கு

''சத்தியாக்கிரகம் பேராற்றல் படைத்தது. ஏனென்றால் அது பூரண ஆன்மசக்தியிலிருந்து வெளிக் கிளம்பியது''.

— மகாத்மாகாந்தி

## நமது நோக்கு

### நெருக்கடிகள் வந்தாலும்....!

நெருக்கடிகள் வரும்; போகும். செய்திகள் பல பரபரப்பாக வரும்; வந்த வேகத்திலேயே போகும்.

இத்தகைய சந்தர்ப்பங்களில், மக்கள் பதட்டமடையாது இருப்பது மிகமிக அவசியம்.

''பதருத காரியம் சிதருது!'' இது ஆன்ரோர் அனுபவித்துக் கூறிவைத்த ஆலோசனை.

பதட்டமடைந்து, பரபரப்படைந்து உள்ளத்திற் கற்பனைகள் பலவற்றைக் கட்டி எழுப்பி, கண்ட பலன் என்ன?

வெளியிடத்திலிருந்து வரும் வேதனைகளைவிட, நமது பதட்ட நிலையால் ஏற்படும் வேதனைகள் அதிகம் என்பதை நாம் உணரவேண்டும்.

பல நெருக்கடி நிலைகளைச் சந்தித்து, இன்னல்கள் பலவற்றை அனுபவித்துப் பெற்ற பாடங்களை மறந்துவிடலாமா?

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று முன்பு கூறியபோது அதன் கருத்தைப் புரியாது இருந்த மக்கள், வேதனைகளின் விளிம்புக்கு வந்துவிட்ட பலவேளைகளில் அது தம்மிடம் இருப்பதாக உணர்ந்துகொண்டார்கள்.

எதையும் தாங்கும் இதயம் இருந்துவிட்டால், தமது சாதாரண வாழ்க்கைக் கடமைகளைச் செவ்வனே செய்துவிடலாமல்லவா?

பரபரப்புகளையே எண்ணிக் கொண்டிருந்து, அவற்றையே பேசிக்கொண்டிருந்து, கடமைகளை மறந்துவிட்டால், ஏற்படும் விளைவுகள் எம்மைத்தான் பாதிக்கும் என்பதை நாம் மறந்துவிடலாமா?

பொருளாதார உற்பத்திகள் எவ்விதத்திலும் பாதிப்படையாத விதத்தில் புத்திசாலித்தனமாக நடந்துகொள்வதில் விழிப்பாக இருக்காவிட்டால், அதன் விளைவுகளை அனுபவிக்கப் போகிறவர்கள் மக்கள்தான்!

போர் பல உருவங்களில் நடைபெறுவதுண்டு. ஆயுத முனைகளில் மாத்திரம் என எண்ணிக் கொண்டிருந்தால், ஏமாந்து விடுவோம்.

மறைமுகப் பொருளாதாரப்போரின் சூட்சுமங்களை மக்கள் அறியாதிருந்தாற் பாதிக்கப்படப் போவதும் அவர்களே!

எனவே, மக்களின் அன்ருடப் பிரச்சனைகளான உணவு, உடை, போக்குவரத்து போன்ற துறைகளில் பாதிப்புக்கள் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, விவசாயப் பெருமக்கள், தங்கள் பணிகளில் எவ்வித சோர்வுமின்றிப் பணியாற்றவேண்டும். அதற்குச் சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு மிகமிக அவசியம்.

''நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது''

என்கிருர் வள்ளுவர். இந்த வேளையிலா அவரது தத்துவமும், சித்தாந்தமும்?

மெய், மொழி, மனங்களின் அடக்கத்தைப் பற்றித்தான் கூறியது. நமக்கெதற்கு இப்போது?

இல்வாழ்வான் தன் நன்னெறிகளில் நின்று வேறுபடாது நிற்கவேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கிருர்.

''நெருக்கடி நிலையில் திரியாது...'' என்று சொல்லிப் பார்த்தால் அவரது ஆலோசனையின் ஆழம் புரியும்.

எந்த நிலையிலும் மக்கள், மனம் திரியாது அடக்கமோடு நிற்கவேண்டும்; தமக்கான பணிகளைச் செய்ய வேண்டும்; மலைபோல நிற்கவேண்டும்!

### கிழக்கில் 8 மாவட்டங்களிலும்
## என்டர்பிறைஸ் நிலையங்கள்

(மட்டக்களப்பு)

கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் மத்திய அரசும், வட கிழக்கு மாகாண சபையும் இணைந்து வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் எட்டு மாவட்ட என்டர்பிறைஸ் நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இது வடகிழக்கு மாகாணத்தில் கைத்தொழில் பேட்டைகளை அமைக்க முன்வருபவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று வடகிழக்கு மாகாண சபையின் கைத்தொழில் சக்தி வள அமைச்சின் நிரந்தரச் செயலாளரான க. சுந்தரலிங்கம் கூறினர்.

இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டுள்ளன. முதலாவது நிலையம் திருமலையிலும் 2-வது நிலையம் மட்டக்களப்பிலும் அமைக்கப்படும்.

ஏதாவது தொழிற்சாலைகளை அமைக் விரும்புபவர்களுக்கு அந்த தொழில் பற்றிய பயிற்சிகளும் நிபுணத்துவ ஆலோசனைகளும் மேற்படி நிலையங்களின் மூலம் வழங்கப்படும். (21)

# சொல்வளமும் நிலவளமும் நிறைந்த மட்டக்களப்பு

ஒவ்வொருநாளும்ஏதோ ஒருவகையில் சிறப்புற்றனவாக விளங்குகின்றன. அவ்வகையில் மட்டுநகரிற்கு சிறப்புகளைக் கொடுப்பனவற்றில் சொல்வளமும், நிலவளமும் [இயற்கை வளமும்] குறிப்பிடத்தக்கனவாகும்.

ஒரு மொழியின் பேச்சு வழக்கானது பொது மக்களாலும், அதன் இலக்கியம் புலமைகளாலும் இயன்று நடத்தல் எங்கணும் இயற்கை பண்டைத் தமிழகத்திலே அறிவியற்துறைகளிற் சேர்ந்த புலமக்கள் மட்டுமின்றிப் பொது மக்களுங்கூட நுண்ணறிவு படைத்தோராய் இருந்திருக்கின்றனர். அதனுல் அவர்கள் பொருள்களின் இயல்புகளை எல்லாம் நுணுகியறிந்து அவற்றிற்கியைந்த நற்பெயரிட்டு வழங்கினுர்கள். இவ்வாறு வளர்க்கப்பட்டு வரும் சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவானதாகும். எனினும், தனக்கென்றே அமைந்த அச்செஞ்சொல்வளத்தில் தமிழ்மொழியானது மற்றைய மொழிகளிலுஞ் சிறந்து விளங்குகிறது என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

''திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் அமைத்துத் தந்த கால்ட்வெல்ட் என்னும் மொழிநூற் புலவர் தமிழின் சொல்வளச் சிறப்பினையும் பொருள்களின் நுண்ணிய பேதமெல்லாம் தனித்தனிப் புலப்படுமாறு வெவ்வேறு சொற்களை வகுத்தமைத்த பழந்தமிழரதுமதிநுட்பத்தினையும் பாராட்டும் போது:

யும் எடுத்துக் காட்டுவதே சிறப்பாகும். ஒரு நாட்டின் பண்டைய வரலாற்றை அறிவதற்குப் புத்தகங்களும் செய்யுள்களுந்தான்வேண்டும் என்ற நியதிஇல்லை. அந்நாட்டுமொழி அல்லது சொல்கூட வரலாறுரைக்கும் பெருங்கருவியாய் அமையும்.

இவ்வகையில் தான் மட்டுநகர் வளத்தில் அதாவது தனது பழைய சொல்வளத்தில் சிறந்து நிற்கின்றது. குறிப்பாக தென் தமிழில் சிறப்பெய்தி நிற்கின்றது. தமிழ் நாடுமறந்துவிட்ட எத்தனையோ தமிழ்ச் சொற்கள் இங்குள்ள பொது மக்களின்

### செல்வி எஸ். ரோகினி

''தமிழ் போன்ற திராவிட மொழியை நன்குகற்ற ஐரோப்பியர் ஒருவர், அத்தகு வியத்தகு மொழியை வளர்த்துள்ள மக்களினத்தை மதிப்போடு கருதாமலிருக்க முடியாது''

என்று இவ்வகையில்:

''தென்னிந்தியப் பழங்குடி மக்கள் மிக மதிநுட்பம் வாய்ந்தவர் என்பதற் கையமில்லை''

என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

தமிழிலே இவ்வாறு வியத்தகுமுறையில் சிறந்து விளங்கிய நம் சொல்வளத்தின் இன்றைய நிலமை என்ன? புறநாகரீகத் தொடர்பாலும், பிற மொழியார் ஆட்சியாலும் நமது மொழிச் செல்வத்தை நாம் மெல்ல மெல்ல இழந்து வந்துள்ளோம். மொழியினது சொல்லமைப்பின் நுண்சிறப்பு இன்றியமையாமை என்பனவற்றை அறிந்து கொள்ள நாம் தவறிவிட்டோம். பாரம்பரியத்தை பாதுகாக்கத்தவறிவிட்டோம். நாம்விட்ட பிழையினை உணர்வதும், அதனைத் திருத்த முயல்வதும் அவமானம் என்ற போலிமானத்தைப் பிறராட்சியிற் கடைப்பிடித்தோம்.

ஆயினும் தமிழகத்தின் மானங்காக்கும் பழம்பரம்பரையினர், நாட்டுப்புறங்களிலே இன்னமும் வாழ்ந்து கொண்டிருத்தல் பெரும் புண்ணியமாயிற்று. நம்மொழிச் சிறப்பை வேண்டி நிற்கும்போது நமக்கு கைகொடுத்து, பழந்தமிழ் சொற்குவியலுக்கு வழிகாட்டிச் சென்ற பெருமக்கள் கிராமப்புறங்களிலே வாழ்கின்றனர். வெறும் வெளிப்பகட்டினைச் சிறந்தவாழ்வின் சின்னமென்று நம்மிடையே பலர் கருதினர். அப்பகட்டினை மதிக்காது பழைய பண்பட்ட மொழி வளத்தினையும் பழைய நாகரீக வாழ்வின் சிறப்பினையுஞ் சிறந்தன என்று போற்றி, வழி விலகாது வாழ்ந்து வந்த நாட்டுப்புற மக்கள் அதனுல் நமக்கு அநாகரீகராகத் தெரிந்தனர். ஆயினும் காலம் நம்நிலையை மாற்றி ஒரு மொழிக்கிருக்கும் சிறப்பும் மதிப்பும் கொண்டே அம்மொழிபேசும் மக்களின் பெருமைஅளவிடப்படுகின்றதென்ற உண்மையை நமக்குக் காட்டியுள்ளது.

ஒரு மொழியானது அந்நாட்டு மக்களின் பேச்சு சிறப்பினையும் இலக்கிய அழகினையும் மட்டும்காட்டுதல்கூடாது. அந் நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியினையும். வரலாற்றை

பேச்சிலே வழங்குகின்றன. பழமையான தோற்ற வடிவுகளும் உயர்ந்த இலக்கியப் பொருளுங்கொண்டசெல்வாக்குடையார் இந்நாட்டு மக்கள். இவர்தம் பேச்சுவழக்கில் உள்ள பல சொற்கள் மொழி ஆராய்ச்சியாளருக்கு நல்விருந்தாய் அமைந்து நடக்கின்றன.

மேலே சுருக்கமாக மட்டும் நாம் சொல்வளத்தை கண்டது போல நிலவளத்தை மிகச்சுருக்கமாக நோக்குவோம் ஒரு நாட்டின் பொருள்வளங்கூட, அதன் விளைபொருள்களுக்குரிய சொல்வளங்கொண்டு நன்கறியப்படுகின்றது. மட்டுநகர் தானிய வகைகளிலோ மரமுந்திரி வெண்ணெய் தயிர், ... பால் என்ற

(7-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### கிராம சேவையாளர் விளக்கம்

யாழ். 118, மயிலிட்டி தெற்கு கிராம சேவைஅலுவலர் பிரிவில் 60 குடும்பங்களுக்கு 1990-05-27-ம் திகதி யாழ். பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கி கிளைகள் மூலம் வீடமைப்பு நன்கொடை வழங்கப்பட்டது. ஆனுல் வீடு திருத்துவதற்கு ஏற்பட்ட செலவு வீடமைப்புஅபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட்ட குழுவினுல் பரிசீலனை செய்யப்பட்டு வழங்கப்பட்டது. வீடு திருத்தாதவர்களுக்கும், முற்றத்திற்கு சீமெந்து போட்டு பதினையாயிரம் நன்கொடை எதிர்பார்த்தவர்களுக்கும் முழுமையாக வழங்கப்படவில்லை.

1990-06-27-ம் திகதி பணம் பெற்றவர்களின் குடும்ப பதிவு அட்டைகள் திரும்பப் பெறப்பட்டு உ. அ. அதிபர் ஒப்பம் இட்டால் மட்டும் அடுத்த கட்டப் பரிசீலனை மேற்கொள்ளப்படுமென்ற அபிவிருத்தி உத்தியோகத்தரின் அறிவுறுத்தலுக்கிணங்க 59குடும்ப பதிவு அட்டைகள் மீளப்பெற்று உ. அ. அலுவலகத்தில் 90-5-3ம் திகதி என்னுல் ஒப்படைக்கப்பட்டது. ஒருவர் பணம் பெருத காரணத்தினுல் அவருடைய குடும்ப பதிவு அட்டை திரும்பப் பெறப்படவில்லை.

இச்செயல் மக்களுக்கு அவர்கள் திருத்திய வீடுகளுக்கு அடுத்த கட்டப் பரிசீலனை விரைவில் நடைபெறவேண்டுமென்ற நல்நோக்கில் செய்யப்பட்டது.

இ. சி. தெட்சணுமூர்த்தி
கிராம சேவை அலுவலர்
யாழ். 118
மயிலிட்டி தெற்கு.

### பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் அருள்மொழி மணிகள்

(1) அமைதியின் ஆழத்தில் மாத்திரமே கடவுளின் குரலைக் கேட்க முடியும்.

(2) அஞ்ஞானம் என்னும் கடமை விலங்கிலும் மரணம் கூட இனியது.

(3) மனிதனின் இருதயம் கடவுளின் ஆலயம். அதை 'நான்', 'எனது' என்னும் எண்ணங்களால் பொசுக்காதே.

## பலதும் பத்தும்

### உப்பு

''உப்பிட்டவரை உள்ளளவும் நினை''-இன்று இதய வியாதிக்காரர் தொகை அதிகரித்துவிட்டதால், தமக்கு அதிசய உப்பைக் கொடுத்து, தமது உடல் நலத்தைக் கெடுப்பவரை என்றும் நினைக்கத்தான் வேண்டும்...!

ராமானுஜர் உப்பிற்கு இட்ட பெயர்...ராமரசம்... பௌத்தர்கள் இட்ட பெயர் என்ன தெரியுமா...? ஜீவரசம்!

இத்தாலிய படை வீரர்களுக்கு முன்பு என்ன சம்பளம் கொடுத்தார்கள் தெரியுமா?... உப்புத்தான்! எனவேதான் உப்பின் பெயரைக் கொண்ட Salary என்ற பெயர் வந்தது.

இன்று தென்னிலங்கையிலே; 'கழலை' வியாதி பெருகிவிட்டது. காரணமே 'அயடீன்' சத்துக் குறைவு. எனவே 'அயோடைஸ்ட்' உப்பு அங்கு பாவனைக்கு வந்துவிட்டது.

சித்திரா பௌர்ணமியில் விரதமிருப்பவர்கள் அன்றையதினம் உப்புச் சேர்ப்பதில்லை. பல வியாதிகளுக்கு ஆயுர்வேத வைத்தியத்தில் உப்பில்லாப் பத்தியம் சிபார்சு செய்கிருர்கள்.

சரி, இந்த உப்பு உற்பத்தியைக் கல்லுண்டாயில் தொடங்கினுர்களே... அத்திட்டம் கைவிடப்பட்ட காரணம் என்ன...?

இதை இங்கு 'கிளறிக் காட்டுவதன் காரணம், கைத்தொழில்களைத் திட்டமிடும்போது, பொருத்தமான தொழில்நுட்பத்தின் பிரயோகம் அவசியமல்லவா?

வாணி

## பாராளுமன்றத்தில்

# வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு

# அதிகாரப் பரவலை வழங்கி

# பிரச்னையை உடன் தீருங்கள்"

(கொழும்பு)

மட்டக்களப்புநிகழ்வுகளை அடுத்து பாராளுமன்றம் நேற்று முன்தினம்மிகவும்பர பரப்பான சூழ்நிலையில், கூடியது. வழமைக்கு மாறாக சபைக்கூட்டம் அங்கத்தவர்களால் நிறைந்து காணப் பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள்குறித்தவாதப் பிரதிவாதங்கள் சபையின் நடவடிக்கைகளின் மிகுந்த நேரத்தை ஆக்கிரமித்தது.

### அநுரா குற்றச் சாட்டு

சபை நேற்று முன்தினம் காலை 9-00மணிக்கு, சபாநாயகர் அல்ஹாஜ் எம் எச். முகம்மது தலைமையில்கூடியது.

பதில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா உரையாற்றுகையில் கூறியதாவது:-

''வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை நான் கண்டிருக்கின்றேன். பொலிஸ் படையை இயங்கவிடாமல் இவர்கள் தடுத்து, பொலிஸ்நிலையங்களையும் கைப்பற்ற முயன்றுவரும் போது, 6வது திருத்தச்சட்டமூலத்தை ரத்துச்செய்வதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?

விடுதலைப்புலிகளின்நடவடிக்கைகளுக்கு எதிராக அரசு தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்''

### ரஞ்சன் பதில்

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா விசேட அறிக்கை சமர்ப்பித்து கிளப்பிய கேள்விகளுக்கு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன மிகவும் அவதானமாகவும் சற்று உணர்ச்சிவசப்பட்டவராக பதில் அளித்து உரையாற்றினர். அவர் கூறியதாவது:

''தாங்கள் செய்யும் எல்லாக் காரியங்களிலும்,வெற்றி பெறுவோம் என்று சிலர் நினைத்தால் அது குழந்தைதனமானதாகவே முடியும்.''

''கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ள பொலிஸ் நிலையங்களை நாம் மீண்டும் கைப்பற்றுவோம். தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் ஒன்றை நாம் மேற்கொள்ளவில்லை. ஆயுதங்களை கையிலேந்திவடக்கு கிழக்கில் சர்வாதிகாரத்தை நிலைநாட்டமுயலும் குற்றமிழைப் போருக்கு எதிரான யுத்தமே இதுவாகும்.

### தேசிய பிரச்னை இது

''தமிழர், முஸ்லிம், சிங்களவர் என்ற பேதமின்றி, கட்சி வேறுபாடு இன்றி. சகலரின் உதவியும் அரசுக்கு தேவை. இன்று நாம் முகம் கொடுக்கும் பிரச்சனை கட்சி அடிப்படையில் பார்க்க கூடியதல்ல. தேசிய அடிப்படையில் நோக்கவேண்டியது. ஜே. வி. யினரை ஜனநாயக வழிக்கு வரும்படி அழைப்பு விடுக்கப் பட்டது. அவர்கள் செவி சாய்க்கவில்லை. இறுதியில் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைமக்கள் அறிவார்கள்! அதுபோன்று விடுதலைப் புலிகளையும் சனநாயக வழிக்கு வரும்படி அழைப்பு விடுக்கின்றேன். அவர்கள் எம்மை ஏமாற்ற நினைத்தால் அவர்களின் சவாலை நாம் எவ்வாறு எதிர்கொள்வது என்பதை அறிவோம்.

### இரகசிய ஒப்பந்தம் இல்லை

''இந்த நாட்டை ஒரே நிர்வாகத்தின் கீழ் வைத்திருக்க நாம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம். குற்றவாளிகளுக்கு அரசாங்கம் அஞ்சப் போவதில்லை. விடுதலைப் புலிகளுக்கும் எமக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் எதுவுமில்லை.''

''இனப்பிரச்சனை 1956 ம் ஆண்டிலிருந்து இருந்துவருகிறது. இரத்தக்களரி இல்லாமல் இப் பிரச்சனையைத் தீர்க்க முயன்றுவருகின்றோம். பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதே ஜனநாயக வழிமுறை.''

### சபையின் குறுக்கீடுகள்

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன உரையாற்றும் போது ''அரசாங்கம் விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறினால் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தின் அதிகாரம் அஸ்தமித்துவிடும்.'' என்று எச்சரிக்கை விடுத்தார்.

## "விடுதலைப் புலிகளின் எதிர்க்குழுக்கள் எதிர் நடவடிக்கையில் ஈடுபடுகின்றன"

### ரஞ்சன் குற்றச்சாட்டு

''ஐக்கிய சோசலிச முன்னணியைச் சேர்ந்த திரு வாசுதேவநாணயக்கார பேசுகையில், சபையில் பலத்த கூக்குரல்கள் கிளப்பப்பட்டு சபை நடவடிக்கைகள் காலதாமதப்பட்டது.''

திரு. வாசுதேவநாணயக்கார தமது உரையில் கூறியதாவது:-''விடுதலைப் புலிகள் மட்டுமல்ல அரசாங்கமும் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்கிறது. படையினர் நடுநிசி நேரங்களில் வீடுகளுக்குச் சென்று இளைஞர்களைக் கைது செய்து வருகின்றனர். இவ்வாறான செயல்களுக்கு''ஜனாதிபதியின் உத்தரவு'' என்ற வார்த்தை பிரயோகிக்கப்படுகிறது. இது ஜனாதிபதியின் உத்தரவு தானா? என்பதை நாம் அறிய விரும்புகின்றோம்.

### அரசியல் சட்டவிரோத செயல்

கொழும்பில் தற்போது பதட்ட நிலை இல்லை என்று கூறும் அரசாங்கம் ஏன் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்?''

றிச்சார்ட் டி சொய்ஸாவின் மரண விசாரணை பற்றி திரு. வாசுதேவ குறிப்பிடும்போது, நீதிமன்றத்தில் இருக்கும் வழக்கு குறித்து கௌரவ அங்கத்தவர் சபையில் பேச முடியாது என்று சபை முதல்வர் திரு. ரணில் விக்கிரமசிங்க ஒழுங்கு பிரச்சனையைக் கிளப்பினர்.

இதனையடுத்து சபை சூடு பிடித்து எதிர்க்கட்சியினரும், அரசாங்கக் கட்சியினரும், அடிக்கடி குறுக்கீடு செய்து வாதித்து மோதிக்கொண்ட நிலையில் சபையில் சுமார் அரை மணிநேரம் அமளி துமளி ஏற்பட்டது.

பகல் இடைவேளைக்கு பின்னர் சபை மீண்டும் கூடிய போது தொடர்ந்தும் பேசிய வாசுதேவ நாணயக்கார ''நீதிமன்ற நடவடிக்கைகள்சம்பந்தமான விடயங்கள்குறித்துசபையில் ஒழுங்குப் பிரச்னை எடுக்கப்படும் போது சபை உறுப்பினர் ஒருவர் நீதிமன்ற விடயத்தில் தலையிட்டுப் பேசுகிறாரா? என்பதை அவதானிக்காமல் அமைச்சர் குறுக்கிடுவது சபை நடவடிக்கைகளைக் கேலிக்கூத்தாக்குவதாக முடியும்'' என்று கிண்டல் செய்தார்.

### வடக்கு, கிழக்கு விமான நிலையங்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. கே. நவரத்தினம் பேசுகையில்: வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள விமான நிலையங்கள் புதுப்பிக்கப்படவேண்டும் என்றார்.

''பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்ற அரசாங்கம் முயலவேண்டும். இது சுற்றுலா துறை வளர்ச்சிக்குமிக அவசியம். அரசாங்கம் தேசிய ரீதியில் சிந்தித்து செயற்பட்டு ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. நவரத்தினம் கேட்டுக்கொண்டார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்த திரு. அனுராரத்வத்தை உரையாற்றும் போது: ''குறைநிரப்பு பிரேரணையை அரசாங்கம் முன் வைத்தது விமானத்தளங்களிற் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காகவே என்றும் இவை எத்தகைய நடவடிக்கை என்பதை சபைக்கு விளக்கம் அளிப்பது தற்போதைய சந்தர்ப்பத்தில் மிக அவசியமானது'' என்று வலியுறுத்தினர்.

### பேச்சுவார்த்தைக்கு ஆதரவு

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, நாட்டை பிளவுபடுத்தாத எந்தப் பேச்சுவார்த்தைக்கும் ஆதரவு அளிக்கும் என்று அவர் மேலும் கூறினர்.

ஐக்கிய சோஷலிஸ முன்னணியைச் சேர்ந்த திரு. அத்தாவுட செனிவரத்ன உரையாற்றுகையில் கூறியதாவது:

''கடந்த 12 வருடங்களாக ஆயுதப் படையினருக்கும், பாதுகாப்புக் காரணங்களுக்கும், கருவிகள் வாங்குவதற்கும் அரசாங்கம் எத்தனையோ குறை நிரப்புப் பிரேரணைகளை முன் வைத்தது. அதனால் பெறப்பட்ட பணம் முழுவதும் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை.

### அதிகாரப் பரவலை வழங்குங்கள்

''வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு உரிய அதிகாரப் பரவலை வழங்கித் துரிதமாக இப் பிரச்சனை தீர்க்கப்படல்வேண்டும்.

''இந்தியாவுடன் உள்ள நல்லுறவை மீண்டும் மென்மேலும் வளர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மனித உயிர்களின் அழிவுகளைத் தடுக்க அரசாங்கம், பேச்சுவார்த்தைகளைத் தமிழ்க் குழுக்களுடன் துரிதமாக நடாத்தி முடிக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு.ரஞ்சன் கூறியதாவது:

### தமிழ் மக்களை பாதுகாக்கவேண்டும்

''1974ம் ஆண்டு முதல் கட்டுநாயக்கா விமானத் தளம் விரிவாக்கப்பட்டு வந்துள்ளது. இக்குறை நிரப்புப் பணம் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குரிய உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கே பயன்படுத்தப்படும்'' என்றார்.

வடக்கு-கிழக்கு நிலைமை குறித்து திரு. ரஞ்சன் மீண்டும் குறிப்பிடுகையில்;

''குற்றவாளிகளின் பொறுப்பற்ற செயல்களுக்கு எதிராக முப்படைகளும் செயற்படும். அதுபற்றிக் கோபம் கொண்டு செயற்படாமல், நாட்டில் பரந்து வாழும் தமிழ் மக்களைப் பாதுகாக்கவேண்டும். விடுதலைப் புலிகளை விட்டுப் பிரிந்த எதிர்க் குழுக்களும் சில எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன.

நாட்டில் அமைதியை நிலைநாட்டவும், பிரச்சனைகளைத் தீர்க்கவும் எதிர்க் கட்சியினரின் ஒத்துழைப்பை அரசாங்கத்துக்கு வழங்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

(அ)

---

# மாகாணசபை கலை, கலாசார முயற்சிகளுக்கு உதவும்

(மட்டக்களப்பு)

''ஒரு நாடு பொருளாதார ரீதியில் மட்டுமோ அல்லது ஆன்மீக ரீதியில் மட்டுமோ முன்னேறினால் போதாது அபிவிருத்தியில் தன்னிறைவு பெற வேண்டுமாயின் கலை, கலாசார நடவடிக்கைகளில் வளர்ச்சி பெறவேண்டும்.''

இவ்வாறு மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற கலாசாரப்பேரவையின் கிராமியக் கலை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடகிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. எஸ். கணேசநாதன் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: விபுலாநந்தர் பிறந்த மீன்பாடும் தேன்நாடு கலை கலாசார முயற்சிகளுடன் கூடிய மாவட்டமாகும். கடந்த ஏழு எட்டு வருடங்களாக இங்கு நிலவிய சூழ்நிலைகாரணமாக கலைகள் அடங்கி ஒடுங்கியிருந்தன. இப்போது ஓரளவு சுதந்திரம் கிடைத்துள்ளது.

இந்தத் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கலைகளுக்கு புத்துயிர் அளிக்கவேண்டும்,

வடக்கு கிழக்கு பகுதியில் கலாசார நடவடிக்கைகளுக்கு பல திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றோம். நமக்கென தனியான கலை, கலாசாரமுண்டு. பாரம்பரியமுண்டு. எனவே சகல கலை, கலாசார முயற்சிகளுக்கும் உதவ மாகாண சபை தயாராக உள்ளது.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் தமது தலைமையுரையில் கூறியதாவது: மீன்மகள் பாட வாவிமகன் ஆட எட்டுத் திசையும் கலை மணம் கமழும் மாவட்டம் மட்டக்களப்பாகும். நாம் அனைவரும் ஒன்றுபடுவதன் மூலம் கலை, பொருளாதாரம் ஆகியவற்றை அபிவிருத்தியடையச் செய்யலாம்.

புனர்வாழ்வு புனரமைப்பு சமூக நல அமைச்சின் செயலாளர் திரு. சரித்தரத்வத்தை உட்பட மாகாண சபையின் செயலாளர்கள், வடகிழக்கு அரச அதிபர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோர் இக்கலை விழாவில் கலந்து கொண்டனர்.

கரகம், கிராமிய நடனம், கோலாட்டம், கொம்புமுறி, நாட்டுக்கூத்து ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (121)

---

### சாவகச்சேரி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

எக்ஸ்ரே படப்பிடிப்பு கருவி நிலையம், நிர்வாகப் பகுதிக்கான கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான வரைபடங்களும் தயாராகி விட்டன. சுமார் எட்டு லட்சத்திற்கும் அதிகமான நிதியும் ஆஸ்பத்திரி அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (82)

---

## கிராமோதய தலைவர் பணத்துடன் தலைமறைவு

(புத்தளம்)

புத்தளம், புளியங்குளம் கிராமோதயத் தலைவர் ஜனாதிபதியின் வரவையிட்டும் புதுப்பித்த வண்ணாத்திவில்லு ஆயுர்வேத வைத்திய சாலையின் ''கொன்ருக்கர்'' ஆகப்பெற்ற தொழிலாளர் சம்பளம் பணமான 58,000 ரூபா பணத்துடனும்ஒரு பிள்ளைக்குதாயாகிய ஆசை நாயகியுடன் தலைமறைவாகிவிட்டதாக புத்தளம் பொலிசாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. இவர் மூன்று பிள்ளைகளின் தகப்பனாரென்றும், தற்சமயம் வேறொரு இடத்தில் ஆசை நாயகியுடன் வாழ்வதை அறிந்த பொலிசார் தேடுதல் வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள். (154)

---

## கலைவிழா நாளை நடைபெறும்

(பண்டத்தரிப்பு)

இலங்கை குடும்பத்திட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் சாந்தை கிராமிய குடும்பத்திட்ட தொண்டர் அறிமுகவிழாவும் கலைவிழாவும் இன்று (வியாழன்) சாந்தை சித்தி விநாயகர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் வ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக வடமாகாண தபால் திணைக்கள பணிப்பாளரும், இ. கு. தி. சங்க யாழ். மாவட்ட பொதுச்செயலாளருமான திரு. எஸ். எம். சேதுகாவலர் கலந்துகொள்வார். மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வி. சிறிகாந்தா. இ. கு. தி. சங்க யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. என். ரி. அன்பானந்தன் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். நாடகம், கவியரங்கு, இன்னிசை ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (72)

# விவசாயபீடத்துக்கான காணி 21-ம் திகதி கிடைக்கும்

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழகக் கிளிநொச்சி விவசாய பீடத்திற்கென ஒதுக்கப்பட்ட 25 ஏக்கர் அரச காணியை யாழ், பல்கலைக்கழகம் இம்மாதம் 21ம் திகதி கிளிநொச்சி அரசாங்க அதிபரிடமிருந்து பொறுப்பேற்கவுள்ளது.

1984ம் ஆண்டு தொடக்கம் மேற்படி 25 ஏக்கர் அரசகாணியும் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கென ஒதுக்கப்பட்டிருந்தது.

ஒதுக்கப்பட்டிருந்த மேற்படி அரச காணியில் அத்துமீறிஇருபத்தொரு குடும்பங்கள் வசித்து வந்தன. பல வருடங்களாக மேற்படி குடும்பங்களை அந்தக் காணியிலிருந்து அப்புறப்படுத்துவதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன.

கடந்த வாரம் அவர்கள் காணியைவிட்டு வெளியேறுவதற்குச் சம்மதம் தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகம் நேற்று முன்தினம் நஷ்ட ஈடாக 5லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியை மேற்படி இருபத்தொரு குடும்பங்களுக்கு வழங்கியது.

யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு.க.பரமேஸ்வரன், கிளிநொச்சி அரசஅதிபர் திரு. கே. மாணிக்கவாசகர், கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் திரு. க குணராசா ஆகியோர் நஷ்டஈடு வழங்கும் வைபவத்தில் பங்குபற்றினர். (153)

## அக்கரைப்பற்றில் புதிய மகளிர் கல்லூரி

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தனியான மகளிர் கல்லூரி ஒன்று உதயமாக இருக்கிறது. இது தொடர்பாக அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் வித்தியாலயத்தின் ஆசிரியை திருமதி சரோஜினி லோகநாதசிறி, 'பெண்கள் வித்தியாலயம்' ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தி ஒரு பிரேரணையையும் சமர்ப்பித்தார். இதனைச் சமுகம் கொடுத்த பெற்றோர் முழுமையாக ஆதரித்துள்ளார்கள்.

ஆலையடிவேம்புப் பிரதேசத்தில் 10 கலவன் பாடசாலைகள் இருக்கின்றன. இப்போது ஸ்ரீ இராமகிருஷ்ண மகாவித்தியாலயம் இரு பிரிவுகளாகச் செயல்படுகிறது. ஒன்று ஆரம்பத்திலிருந்து 5ம் வகுப்பு வரை மற்றது 5ம் வகுப்பு முதல் உயர் வகுப்பு வரை. இவற்றில் ஒன்றைப் பெண்கள் மகளிர் வித்தியாலயமாக மாற்றக்கூடிய வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கிறதென்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பெற்றோர்களைக் கொண்ட குழு ஒன்று, விரைவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து நடவடிக்கைகள் மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கிறார்கள். [142]

## புடவைக் கைத்தொழில் அபிவிருத்தி

(கொழும்பு)

புடவைக் கைத்தொழிலை அபிவிருத்திசெய்யும் பல்வேறு திட்டங்கள் குறித்து ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், திட்டமிடல் அதிகாரிகளுடன் புடவைக் கைத்தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தினர். (அ)

## பாலர்பாடசாலைக்கு தளபாடங்கள்

(வட்டுக்கோட்டை)

அறவழிப்போராட்டக் குழுவினால் சித்தன்கேணி கலைநகரில் நடாத்தப்படும் நேருஜி மாதர் சங்கப் பாலர் பாடசாலைக்குப் போதியளவு தளபாடங்களை அனுப்பிவைப்பதாக அறவழிப் போராட்டக் குழுத்தலைவர் திரு.க.கோபாலகிருஷ்ணன் வாக்குறுதியளித்துள்ளார்.

இவர், அறவழிப் போராட்டக் குழுச் செயலாளர் திரு. க. ஜீவகதாஸுடன் இப்பாலர் பாடசாலையைப் பார்வையிட்டபோது இங்கு தளபாடப் பற்றாக்குறை இருப்பதைக் கண்டறிந்ததை அடுத்தே போதிய தளபாடங்களை விரைவில் அனுப்பிவைப்பதாகத் தெரிவித்தார். [129]

## அம்பாறை மீனவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்

(அக்கரைப்பற்று)

அம்பாறை மாவட்டத்தில் மீன் இனங்களுக்கு ஏற்பட்ட நோயினால் மீன்பிடித்தொழில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படவிருக்கிறது.

இது தொடர்பாக இம் மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலை மட்டும் நம்பி வாழ்க்கை நடத்திக்கொண்டு வருபவர்களின் விபரங்களை 17 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும் கடற்றொழில் பரிசோதகர்கள்' உதவி அரசாங்க அதிபர்' கிராம சேவையாளர்கள் ஆகியோரின் அனுசரணையுடன் விபரங்கள் சேகரித்துவருகிறார்கள்.

முழுமையான விபரம் கிடைத்ததும் ஒரு வாரத்துக்கான உலர்ந்த உணவுப் பொருட்கள் வழங்கப்படவிருக்கிறது. இதே நேரத்தில் இம் மாவட்டத்தில் மீன்களுக்கு இருந்துவந்த நோய் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (142)

## புத்தளத்தில் கொள்ளை: இராணுவ முகாம் சென்ற துப்பறியும் நாய்!

(புத்தளம்)

புத்தளம், வெட்டாளை, முள்ளியபுரத்தில் அண்மையில் வர்த்தகர் எம். ஏ. ஏ. ரசீட் என்பவர் வீட்டில் நடந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பணமும், நகையும் கொள்ளை தொடர்பாக புத்தளம் பொலிசார் கண்டியிலிருந்து துப்பறியும் நாயை வரவழைத்து தேடுதல் நடத்தினர்கள்.

துப்பறியும் நாய் புத்தளம் வந்தடைந்ததும், ஐ பி.ஜெயசிங்கா தலைமையில் பொலிஸ் கோஷ்டியொன்று, நாயைஒரு வானில் ஏற்றிக்கொண்டு களவு நடந்த இடத்திற்குச் சென்று விசாரணையில் ஈடுபட்டார்கள்.

நாய் களவுபோன வீட்டிலிருந்து சுமார் 10 யார் தூரம் சென்றதும், ஒரு மதவுக்கருகில் நின்றுவிட்டது. அதன் பிறகு நாயை வானில் ஏற்றிக்கொண்டு கொள்ளை நடத்தியவர்கள் பயன்படுத்திய மோட்டார் சயிக்கிள் அநாதரவாக விடப்பட்டிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

அவ்விடம் வந்ததும் நாயை வானிலிருந்து இறக்கிவிட்டடனர். அவ்விடத்திலிருந்து நாய் கிட்டத்தட்ட சுமார் ஆயிரம் பொதுமக்கள் படைசூழ சவீப்புர வீதியால் ஒன்றரை மைல்கள் அப்பாலுள்ள இராணுவத்தினர் முகாமிட்டிருக்கும் 'காம்ப்' வாசலில், கதவு பூட்டப்பட்டிருந்ததினால் அவ்விடத்தில் படுத்துவிட்டது.

பின்னர் இராணுவத் தளபதியிடம் உத்தரவுபெற்று, முன்வாசல் கதவு திறக்கப்பட்டு, துப்பறியும், நாயை இராணுவகாம்பினுள் நுழைய விட்டனர். துப்பறியும் நாயோ! காம்பினுள் அங்குமிங்கும் அலைந்து திரிந்துவிட்டு இறுதியாக, இராணுவத்தினர் படுத்துறங்கும் இரு கட்டிலில் ஏறிப்படுத்துவிட்டது. இது தொடர்பாக பொலிசார், இராணுவத்தினரின் உதவியுடன் மேல்விசாரணையை மேற்கொண்டு வருகிறார்கள். (154)

## வேல்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர் நாளை யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்]

வேல்ஸ் பல்கலைக்கழக ஹாடிவ் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் அலெக்ஸ் கிரே நாளை 15-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு விஜயம் செய்வார்.

யாழ்.பல்கலைக்கழக கம்யூட்டர் பிரிவை ஹாடிவ் பல்கலைக்கழக கம்யூட்டர் துறையுடன் இணைப்பது சம்பந்தமான மேலதிக கலந்துரையாடலை மேற்கொள்ளுவதற்காக இவர் யாழ்ப்பாணம் வருகிறார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா, விஞ்ஞானபீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், கம்யூட்டர் பிரிவுத் தலைவர் பேராசிரியர் இ. குமாரவடிவேல் ஆகியோரை இவர் சந்திப்பார்.

யாழ். பல்கலைக்கழக கம்யூட்டர் ஆலோசனைக் குழுவின் விசேஷ கூட்டம் கம்யூட்டர் பிரிவு ஆய்வுகூடத்தில் அன்றையதினம் பேராசிரியர் இ. குமாரவடிவேல் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் 1992-ம் ஆண்டு முதல் கம்யூட்டர் விஞ்ஞானம் ஒரு பாடமாக கற்பிக்கப்படவிருக்கிறது. [153]

## கிராமசேவை உத்தியோகத்தருக்கு முதலாம் தர பதவி உயர்வு வழங்கக் கோரிக்கை

(மட்டக்களப்பு)

கிராம சேவை உத்தியோகத்தர் தரம் ஒன்றுக்கான பதவி உயர்வு பத்துக்கு ஒன்று என்ற ரீதியில் வழங்கப்பட வேண்டும். இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 35 பேர் இருக்கவேண்டும். ஆனால் இப்போது 1-ம் தர உத்தியோகத்தர்கள் பத்துக்கும் குறைவாகவே உள்ளனர். எனவே 1-ம்தர பதவி உயர்வுகளை வழங்குமாறு கிழக்கிலங்கை கிராம சேவை உத்தியோகத்தர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி சங்கச் செயலாளர் ஏ. ஜே. மங்களராஜ் தலைமையிலான தூதுக்குழு வடகிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ். கணேசநாதனை மட்டக்களப்பு செயலகத்தில் சந்தித்து பேசியபோதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மேலும் சில கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டன.

நியமனங்கள் இனிமேல் இடம்பெற மாட்டாது என்றும் சம்பள முரபண்டு, மோட்டார் சைக்கிள் ஆகியவை தொடர்பாக மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளுமாறும் பதில் அளித்த திரு. கணேசநாதன் ஏனைய கோரிக்கைகள் தொடர்பாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் அவை தொடர்பாக தான் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (121)

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

ஒருவருடத்துக்குமுன் உழவு யந்திர விபத்தொன்றில் காயமடைந்து நடக்க முடியாத நிலையிலிருந்த ஒருவர் விரக்தியுற்று நேற்று முன்தினம் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த பூதன்நாகமுத்து (வயது-47) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவர். (56)

## வருடாந்த உற்சவம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பெரிய இத்திமடு நாகதம்பிரான் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி நடைபெறும்.

பஞ்சாங்கத்தில் தவறுதலாக எதிர் வரும் 22ம் திகதி உற்சவம் என்று பிரசுரிக்கப்பட்டுள்ளது என கோவில் பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர். (144)

## கல்விச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

மில்க் வைற் தொழிலகத்திற்கு கல்விச்சுற்றுலா ஒழுங்கு செய்யும் பாடசாலை அதிபர்கள் முன்கூட்டியே தொழிலகத்துடன் தொடர்புகொண்டு, வரும் திகதி, நேரம், கலந்துகொள்வோரின் எண்ணிக்கை ஆகியவை பற்றித் தெரிவித்து அனுமதி பெற்றுக்கொள்ளும் படியும் இதனால் கல்விச் சுற்றுலா பயனுள்ளதாக உதவுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கோலாட்டத்தில் முதலாவது இடம்

(புத்தளம்)

புத்தளம் தமிழ் மகாவித்தியாலய மாணவிகள் அண்மையில் நடைபெற்ற மாவட்ட போட்டியில், கோலாட்ட நிகழ்ச்சியில் முதலாவதாகத் தெரிவாகி இம் மாதம் 15ம் 16ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் அகில இலங்கைத் தமிழ்த் தினப்போட்டியில் பங்குபற்றுவதற்காக கல்லூரி சங்கீத ஆசிரியை செல்வி எஸ். தனலெட்சுமியின் தலைமையில் கொழும்பு செல்லவுள்ளார்கள். (154)

## இராசி பலன்

14 - 06 - 1990

வியாழக்கிழமை

மேடம்: பூமிப்பிரச்சனை, புண்ணியச்செலவு' பிடிவாதம்.

இடபம்: சங்கீதம், ஆடம்பரம், துணிவு.

மிதுனம்: சமூக சேவை, புகழ், சுபச்செய்தி.

கடகம்: வீண் யோசனை, நீசர் உதவி, வைராக்கியம்.

சிங்கம்: சுபகாரியம், அரச பலம், மறதி.

கன்னி: அரசியல் தர்க்கம், தொந்தரவு, ஏமாற்றம்.

துலாம்: கடினவாக்கு' வசீகரம், உல்லாசம்.

விருச்சிகம்: ஆரோக்கியம், ஆடம்பரம், அலைச்சல்.

தனுசு: வீண் யோசனை, உதவி, சுகவாழ்வு.

மகரம்: உழைப்பு, உபாதை, அரசியல் தர்க்கம், அமைதியின்மை.

கும்பம்: தூரத்துச் செய்தி, யோசனை, தடை.

மீனம்: நல்வாக்கு, சுபச் செய்தி, கல்வியில் முன்னேற்றம்.

இ.மகாதேவா

## ஆணையாளருக்கு புகார்

(யாழ்ப்பாணம்)

மாவின் விலை அதிகரிக்கப்பட்ட திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே அதிகரிக்கப்பட்ட விலைக்கு மாவு விற்பனை செய்யப்பட்டதாக, அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கூட்டுறவுப் பரிசோதகர், கூட்டுறவு ஆணையாளருக்கு புகார்செய்துள்ளார்.

1 கிலோ மாவு விலை 13ரூபா 15 சதத்திலிருந்து 14 ரூபா 25 சதமாக அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த அதிகரிப்புக்கு இரு தினங்களுக்கு முன்னரே புதிய விலைகு மேற்படி சங்கத்தின் மொத்த விற்பனை நிலையத்தில் 8710 கிலோ மாவு விற்பனைசெய்யப்பட்டதாகவே இப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

## நிர்வாகிகள்

(தென்மராட்சி)

மந்துவில் ஸ்ரீகாந்தன் சனசமூக நிலைய வாசிகசாலைப் பொதுக்கூட்டம் மந்துவில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பாளர் திரு. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்; சி. மாணிக்கவாசகர், உப தலைவர்: வ. கந்தையா, செயலாளர்: க. சிவகுமாரன், உப செயலாளர்: வ. பஞ்சலிங்கம். பொருளாளர்: க. கந்தையா கணக்காய்வாளர்: சி. இராசகுலசிங்கம் நிர்வாக உறுப்பினர் 9 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (81)

### மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நிலைமை:

# குண்டுவீச்சுகளினுல் கிலிகொண்ட மக்கள் பாதுகாப்புதேடி ஓடினுர்கள்!

## பொதுமக்கள் பலி! வீடுகள்சேதம்! குடிசைகள் தீக்கிரை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் பெரும் பதற்ற நிலையில் காணப்பட்டபோதிலும் கடந்த இரு தினங்களுக்குப் பின்னர் நேற்றுப்பகல் சிறிது அமைதியாகவே காணப்பட்டது. வாகனப்போக்குவரத்து மிகவும் குறைவாக நடைபெற்றது. நகரப்பகுதிகளில் சில கடைகள் அங்குமிங்குமாக நேற்றுக்காலை திறந்திருந்தன. கிராமப்பகுதிகளே சிறிதளவு இயங்குகின்றன.

### புலிகளின் கட்டுப்பாட்டில்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டம் முழுவதும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளது.

இம்மாவட்டங்களில் (அம்பாறையில் தமிழ்ப்பகுதியில்) உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களும் நேற்றுமாலை வரை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன.

கல்முனை இராணுவ முகாமில் இடம்பெற்ற மோதல் களையடுத்து தற்போது அம்முகாம் முற்ருக புலிகள்வசம் வந்துள்ளது. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஏனையோர் படகுகள் மூலம் தப்பிச்சென்றுள்ளனர். பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளது

### கைதான படையினர்

பன்னிரெண்டிற்கும் மேற்பட்ட பொலிஸ் நிலையங்களிலிருந்த 600 க்கும் மேற்பட்ட பொலிசாரும் விடுதலைப்புலிகள் வசம் வந்துள்ள இராணுவ முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினரும், பல முகாம்களில் நடைபெற்ற மோதல்களின்போது பிடிக்கப்பட்டவர்களுமாக நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் புலிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

கல்குடா, கும்புறுமூலை, களுவாஞ்சிக்குடி மற்றும் சில இராணுவ முகாம் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலைவரை மோதல் சம்பவங்கள் நடைபெற்றன. இராணுவத்திற்கு உதவியாக நான்கிற்கும் மேற்பட்ட 'ஹெலிகள்' உயரத்தில் பறந்தவாறு தாக்குதலில் ஈடுபட்டிருந்தன. 'சீ-பிளேன்' களும் ரோந்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தன.

### கடும் சண்டையில் காயமடைந்தோர்

இந்த இரு மாவட்டங்களிலும் நடைபெற்ற கடும் சண்டையில் சுமார் 80 ராணுவத்தினரும் 14 பொலிசாரும் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் உடனடியாக விமானம், ஹெலி மூலம் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

விடுதலைப்புலிகள் தரப்பில் 18 பேர் வரை வீரமரணமடைந்துள்ளனர். 15 ற்கும் மேற்பட்டோர் ஆஸ்பத்திரிகளில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நகரின் பல பகுதிகளிலும் அம்புலன்ஸ் சேவையில் ஈடுபட்டிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது.

### பொதுமக்கள் பலியானோர்கள்

மட்டக்களப்பு, அம்பாறை எல்லைப் புறங்களிலும், கல்குடா மற்றும் அதை அண்மித்துள்ள கிராமப் பகுதிகளிலும் களுவாஞ்சிக்குடி, கும்புறுமூலை, மல்வத்தை, கல்முனைப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலிலும், பொம்மர், ஹெலி ஷெல் தாக்குதலிலும் சுமார் 150 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.

நூற்றுக்கணக்கானோர் பலத்த காயங்களுடன் இரு மாவட்டங்களிலுமுள்ள ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பல இராணுவ முகாம்களுக்கு அண்மையிலுள்ள நூற்றுக்கணக்கானவீடுகளும், பொம்மர், ஹெலி, ஷெல் தாக்குதலில் பலத்த சேதமடைந்துள்ளன. 25 ற்கும் மேற்பட்ட குடிசை வீடுகள் முற்ருக எரிந்துபோயுள்ளன.

### போக்குவரத்து துண்டிப்பு

இங்கு இடம்பெற்ற கடும் சண்டையால் மட்டக்களப்பு பிறமாவட்டங்களுடனுன போக்குவரத்து, தொலைத் தொடர்பை இழந்துள்ளது. கடைகளில் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. பல இடங்களிலும் பதுக்கிவைக்கப்பட்ட பெருமளவு உணவுப் பொருள்கள் மீட்கப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அத்தியாவசிய பொருட்களை பதுக்குவோருக்கும், விலைகளை கூட்டி விற்போருக்கும் எதிராக கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பொருள்கள் பெருமளவு தட்டுப்பாடாக இருக்கும் பல கிராமப் பகுதிகளுக்கு விடுதலைப் புலிகள் வாகனங்களில் பொருள்களை விநியோகித்து வருகிறார்கள்.

### தொடர்ச்சியாக குண்டுவெடிப்பு

மாவட்டங்களின் பலபகுதியிலும் நேற்றுமுன்தினம் முழுவதும் குண்டுவெடிப்புச் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டு சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன. மக்கள் பீதி கொண்டு, பாதுகாப்புத்தேடி ஓடினுர்கள். முக்கிய நகரங்களிலும் முக்கிய சந்திகள், வீதிகளில் ஆயுதம் ஏந்திய விடுதலைப்புலிகள் காவல் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள பல சிங்கள கடைகள் மூடப்பட்டு உரிமையாளர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. கடைகளின் முன் ஆயுதம் தரித்த புலிகள் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். (சி)

### சொல்வளமும்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இயற்கை வளத்தைப் பொறுத்தவரை என்றைக்கும்குறைவு கண்டதில்லை. அண்மைக் காலத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களால் பண்ணைகள் அழிக்கப்பட்டு, கால்நடைகளுக்கு நோய்கள் ஏற்பட்டு இயற்கை வளம் குன்றி மழுங்கிய நிலை ஏற்படத் தொடங்கின. ஆயினும் மருத வளம் சார்ந்த மட்டுநகர் நாட்டில் விளையும் உட்பிரிவுகளோ மிகப்பலவாகும். செந்நெல், வெண்ணெல், கருநெல் சம்பா, வாணன் என்று குறிக்கும் சொற்கள் பலவுள. அவற்றுள் சப்பா ஒன்றையே இனமும், குணமும் நோக்கி ஆலரம்பூ, முத்து, ஆனைக்கொம்பன், குண்டு, குருவி, சிறுமணி, சீரகம், புணுகு, இளங்கலை, அல்லி, முருங்கையன் எனப் பல பெயர் வகுத்து வழங்குகிறார்கள். இவை விளைவதற்கு வேண்டிய காலமும் நிலமும் ஒன்றுக்கொன்று சிறிது வேறுபடுவன. இந்நெல்லரிசிகளின் மணம், குணம், சுவை என்பனவும் வேறுபடுவன. இந்நுட்பங்களை நாம் காணும் போது சொல் வளத்தினை விட்டுவிட்டு இயற்கை வளமான வயல் வளத்திற்கும் நெல் வளத்திற்கும் நோக்கியே எம் கருத்து செல்கின்றது.

இலங்கை முழுவதும் இயற்கை வளம், இயற்கைக் காட்சிகளைக் கொண்டுள்ள மட்டு நகரை எடுத்து நோக்கும் போது மட்டுநகரில் வளமும், வளத்தில் மட்டுநகரும் என்ற பொருட்கள் ஒன்றுக்கு ஒன்று சிறப்பைக் கொடுத்து மெருகூட்டி நிற்கின்றன.

## இப்படியும் நடக்கிறது

'திரிபோஷா' மா பற்றி உங்களுக்குத் தெரியுமா?

பலருக்கும் இம் மா பற்றுத் தெரிந்திருந்தாலும்; ''கண்டு கனநாள்'' என்றுதான் நீங்கள் கூறுவீர்கள்.

எப்படியோ...மூன்றுமாத இடைவெளிக்குப் பின்னர் 'திரிபோஷா' மா, யாழ். மாவட்ட அரசினர் வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. உதவியது: கொழும்பிலுள்ள 'கெயர்' நிறுவனம்.

கொழும்பிலிருந்து ரயில் மூலம் கடந்தவாரம் அனுப்பி வைக்கப்பட்ட இந்த மாவை, யாழ். சுகாதாரத்திணைக்களம் லொறி மூலம் இப்பகுதியிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கும், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கும் வழங்கியுள்ளது.

குறிப்பாக, போஷாக்கற்ற குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மாருக்கும் இந்த மா, வைத்தியசாலைகளில் நடைபெறும் 'கிளினிக்'குகளில் வைத்து இப்பொழுது இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனாலும். வயது வித்தியாசமின்றி அனைவரும் பல வகையில் சாப்பிடுவதும் உண்டு.

''இதென்ன, ...'திரிபோஷா'வுக்கு இத்தனை விளம்பரம்?'' என்றுதானே கேட்கிறீர்கள்? அதில்தான் விஷயமிருக்கிறது.

காதோடு காதாக: இப்பொழுது வந்திருக்கும் 'திரிபோஷா' மாவில் வண்டுகள் தாராளமாக நடமாடுகின்றன. தவிர, ஏதோ ஒரு துர்நாற்றமும் வீசுகிறது! அதாவது, பழுதடைந்த தரமற்ற மாதான் இம்முறை இங்கு வந்திருக்கிறது! உங்கள் கைவசமிருந்தால் சற்றுக் கவனியுங்கள்! (தகவல்: பண்டத்தரிப்பு நிருபர்)

'ஊடுருவு'

## எழுத்துச் சீர்திருத்தம் நடைமுறைக்கு வருகிறது

(நாவற்குழி)

அமைச்சரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிமூன்று தமிழ் எழுத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்கான சுற்றுநிருபம் ராஜாங்கஅமைச்சின் செயலாளரும், உயர் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளருமான திருமதி கமலா விக்கிரமசிங்காவினுல் சகல மாகாணச் செயலாளர்களுக்கும், மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

பழைய 13 எழுத்துக்களுக்கான புதிய 13 எழுத்துக்களும் வருமாறு:-

1. ஞு-ஞா, 2. ரு-றா, 3. ஞு-னா, 4. ணை-ணை, 5. லை-லை, 6. ளை-ளை, 7. னை-னை, 8-ணொ-ணொ, 9. ணோ-ணோ, 10. றொ-றொ, 11. றோ-றோ, 12. னொ-னொ, 13. னோ-னோ. (107)

### நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இப்படி ஒரு குறை!

(நாவற்குழி)

ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களும், மாணவிகளும் கல்வி கற்கும் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் சீரான மலசலகூடம் இல்லை!

சீரான மலசலகூடம் இல்லாத காரணத்தினுல் சில சமயங்களில் மாணவர்கள் வெளியே செல்லவேண்டிய நிலை ஏற்படுகின்றது என்று பல பெற்றோர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (107)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள மறைக் கல்வி நிலைய மண்டபத்தில் நாட்டுக் கூத்துக் கருத்தரங்கொன்று இம்மாதம் 17ந் தேதி ஞாயிறு காலை நடைபெறவுள்ளது. திருமறைக் கலாமன்றம் இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது.


ஹரன்

சினிமா

தினசரி 4-00, 6-30. 9-30

சனி, ஞாயிறு

விடுமுறை நாட்களில்

10-30, 2-30 6-30, 9-30

எம். ஜி. ஆர். ஜெயலலிதா அசோகன், சுந்தரராஜன் பண்டரிபாய், சோ நடித்த

தேடிவந்த மாப்பிள்ளை

(புதிய பிரதி)


### உலக கிண்ண உதைபந்தாட்டம்

# வெற்றிவாய்ப்பை நழுவவிட்ட ஆசியநாட்டு அணிகள்

(ரோம்)

இத்தாலியில் நடைபெறும், 14-வது உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் 5-ம் நாள் ஆட்டத்தில், 'எப்' பிரிவில் மோதிய, ஐரோப்பிய சாம்பியனுன கொலன் கோஷ்டி, ஆசிய நாட்டு கோஷ்டியான எகிப்தை வெற்றி பெறமுடியாத நிலையில் விளையாடி சிரமப்பட்டு ஆட்டத்தை சமப்படுத்தியது.

இப்போட்டியில், யாருமே எதிர்பாராதபடி எகிப்துக் கோஷ்டி சிறப்பாக விளையாடி கொலன் கோஷ்டியினருக்கு பெரும் தலையிடியைக் கொடுத்தனர்.

இடைவேளைக்கு முன்பாகவே, கொலன் ஒரு கோலைப் போட்டு முன்னணி வகித்தது. இடைவேளையின் பின்பு எகிப்தின் ஆட்டம் பாராட்டக்கூடிய விதத்தில் அமைந்திருந்தது. இக்கோஷ்டியினர் பல கோல்களைப் போடும் கட்டங்களை நழுவ விட்ட போதிலும் ஈற்றில் ஒரு கோலைப்போட்டு ஆட்டத்தை சமப்படுத்தியது, ரசிகர் கூட்டத்துக்கு பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

### பெல்ஜியம் வெற்றி

'ஈ' பிரிவில், பெல்ஜியம் கோஷ்டிக்கும் - தென். கொரியாக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில் பெல்ஜியம் ஈற்றில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் இரு கோஷ்டிகளும் இடைவேளைவரை மிகவேகமாகவும், சிறப்பாகவும் விளையாடியதால் யாருமே கோல்களை போடாத நிலையில் இருந்தனர்.

இடைவேளையின் பின்பு பெல்ஜியம், மிகசாதுரியமாக விளையாடி இரு கோல்களை போட்டு வெற்றி பெற்றது. இப்போட்டியில் தென். கொரியக் கோஷ்டி இலகுவான முறையில் கோல்களைப் போடும் பல கட்டங்களை நழுவ விட்டதே இவர்களின் தோல்விக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

### இன்றைய ஆட்டங்கள்

இன்று நடைபெறும் ஆட்டங்களில், 'ஏ' பிரிவில் இத்தாலியை எதிர்த்து ஐக்கிய அமெரிக்கா மோதும்.

'பி' பிரிவில்; கமரூனை எதிர்த்து ருமேனியா மோதும்.

'டி' பிரிவில், யூக்கோஸ்லாவியாவை எதிர்த்து கொலம்பியா மோதும். (வி)

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## நேற்றும் பரவலாகத் தாக்குதல்கள்!

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று நண்பகல் முதல் யுத்த நிறுத்தம் அமுலுக்குக் கொண்டுவரப்படுமென உடன்பாடுகாணப்பட்டபோதிலும் நேற்று இப்பகுதிகளில் பரவலாக தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது.

பல பகுதிகளில் பொம்மர், ஹெலி, ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றுவருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தாக்குதல்களில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் இராணுவம் வெளியேற முற்பட்டபோதிலும் புலிகளின் பலத்த தாக்குதல்களால் முகாம்களைப் பாதுகாக்கும் நோக்கில் அவர்கள் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் யுத்தநிறுத்தம் தொடர்ந்தும் நீடிக்குமா என்பது அடுத்த நடவடிக்கையைப் பொறுத்தே அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன!

மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்களில் படையினரிடமிருந்து சுமார் 800 ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தோட்டாக்களையும் இவர்கள் கைப்பற்றியுள்ளதாகவும் தெரியவருகிறது. பொலிஸாரிடமிருந்து 620 ஆயுதங்களும், இராணுவத்திடமிருந்து 175 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மீதான கடும் தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆயுதங்கள் சேதமடைந்துள்ளதாகவும், பெருமளவு வாக்கி டோக்கிகள், வயர்லெஸ் கருவிகள், ஜீப், ட்ரக் வண்டிகளும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தப்பிச்சென்ற பொலிஸார் கைது!

அம்பாறை மாவட்டத்தில் புலிகளின் பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்ற பல பொலிஸார் மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதிப் பொலிஸ் நிலையங்களைச் சுற்றிவளைத்துப் பொலிஸார் அனைவரையும் புலிகள் கைதுசெய்திருந்தனர். இவர்களில் பலர் அம்பாறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகக் கட்டிடமொன்றில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

அலுவலகத்தை உடைத்துத் தப்பிச் சென்ற பொலிஸாரில் பலர் அம்பாறை மாவட்ட எல்லைப் பகுதிகளில் வைத்து மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது புலிகளின் பாதுகாப்பிலுள்ள நூற்றுக்கணக்கான பொலிஸார் பாதுகாப்பான இடங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## புனையுடன் பஸ்கள் திரும்பின

மட்டக்களப்பு நோக்கிச் சென்ற வடபகுதி பஸ்வண்டிகள் மட்டக்களப்பு மாவட்ட எல்லையான புனையுடன் திரும்பி மீண்டும் வடக்கே வந்து சேர்ந்தன.

கடந்த திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற இரு பஸ்வண்டிகளும், மன்னாரிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற ஒரு பஸ்வண்டியும் அன்றைய தினம் பிற்பகல் புனையைச் சென்றடைந்தபோது, இப்பஸ்வண்டிகளை தொடர்ந்து மட்டக்களப்புக்குச் செல்ல அங்கு முகாமிட்டிருந்த இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. இதனையடுத்து வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான அம்மூன்று பஸ்வண்டிகளும் புனையிலிருந்து மட்டக்களப்புக்குச் செல்லாமல் வடக்கு நோக்கித் திரும்பியது இவ்வாறு திரும்பிய அம்மூன்று பஸ்வண்டிகளும் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவை வந்தடைந்து பிரயாணிகளுடன் அங்குதரித்து நின்று நேற்றுக் காலை (புதன்கிழமை) வவனியாவிலிருந்து யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களை நோக்கி அப்பஸ்வண்டிகள் புறப்பட்டன.

மட்டக்களப்புக்குக் செல்கையில் புனையுடன் திரும்பிய இம்மூன்று பஸ் வண்டிகளில் ஒருபஸ்வண்டி நேற்று (புதன்கிழமை) பிற்பகல் இரண்டரை மணியளவில் யாழ். பஸ் நிலையத்தில் பிரயாணிகளுடன் வந்து சேர்ந்தது. இப்பஸ்வண்டி மட்டக்களப்பு இ.போ.ச. டிப்போவுக்குச் சொந்தமானது.

மற்றைய இருபஸ்வண்டிகளும் முறையே யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களை நோக்கி வந்துகொண்டிருப்பதாக நேற்று (புதன்கிழமை) பிற்பகல் தெரிவிக்கப்பட்டது.

## வவுனியாவில் நேற்று......

வவுனியாவில் நேற்று நண்பகலுக்குப் பின்னர் ஓரளவு பதற்றம் காணப்பட்டபோதிலும், இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

நேற்று நண்பகலுடன் பஸ் போக்குவரத்துத் தடைப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற வாகனங்கள் எதுவும் வவுனியாவைத் தாண்டிச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

யாழ் - வவுனியா தொலைபேசிச் சேவை பாதிக்கப்பட்டதுடன், வவுனியா தொலைதொடர்புப் பரிவர்த்தனை நிலையத்தில் ஊழியர்கள் எவரும் நேற்று நண்பகலுக்குப் பின்னர் காணப்படவில்லை.

வவுனியாவிலிருந்து கடைசியாகக் கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி வவுனியாப் பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளினால் சுற்றிவளைக்கப்பட்டதாகவும், பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் தெரியவருகிறது. இதனைத் தொடர்ந்து வவுனியா நகர் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. கடைகளும் பூட்டப்பட்டன.

## வன்னிப் பகுதியில் புலிகள் கண்காணிப்பு

வன்னிப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களையும், இராணுவ முகாம்களையும் விடுதலைப் புலிகள் தீவிர கண்காணிப்பில் வைத்துள்ளனர்.

சகல வீதிகளிலும் செல்லும் வாகனங்கள் இரவு பகலாகக் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகிறன. இதேவேளை பெண் புலிகளும் வாகனங்களைச் சோதனையிடுகின்றனர்.

பல இடங்களில் 'சென்றி'கள் அமைத்தும், பதுங்கு குழிகள் வெட்டியும் புலிகள் இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

பொலிஸார் நிலையங்களைவிட்டு வெளியேறாமல் நிலையங்களுக்குள்ளேயே இருந்து வருகிறார்கள்.

[144]

## தபால்சேவை ஸ்தம்பிதம்!

யாழ். மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கான தபால் சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன. சகல போக்குவரத்துச் சேவைகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளதால் வெளியிடங்களுக்கான தபால்கள் அனுப்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தபால்சேவை தொடர்ந்து அடுத்த சில தினங்களுக்கு ஸ்தம்பிதமடையலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ்கள் இடைநடுவில் திரும்பிவந்துள்ளன.

தாண்டிக்குளம்வரை சென்ற மினி பஸ்கள் தொடர்ந்துசெல்லக்கூடிய சாத்தியம் ஏற்படாததால் தாண்டிக்குளத்துடன் திருப்பிவிடப்பட்டன.

## கொழும்பு - யாழ். பஸ்சேவை ரத்து

நிலைமை சீரடையாவிடில் கொழும்பிலிருந்து வடக்கு - கிழக்கிற்குத் தனியார் பஸ் சேவை எதுவும் நடைபெறாது என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

கோட்டை மத்திய நிலையத்தில் தரிக்கப்பட்டிருந்த தனியார் பஸ் உரிமையாளர்கள் நிலைமையைக் கவனமாக அவதானித்து வருவதாகவும், நிலைமை சீரானால்தான் வடக்கு-கிழக்கிற்கு பஸ் சேவை நடைபெறுமென்றும் தெரிவித்தனர்.

இதேசமயம் வடக்கு-கிழக்கிற்கும் கொழும்பிற்குமிடையில் இ. போ. ச. பஸ் சேவை எதுவும் நடைபெறாதென்று இ. போ. ச. வட்டாரங்கள் தெரிவித்தன.

### புலிகள் மீதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

பயிற்சி முகாம்கள் குறித்து அவர் தெரிவித்ததாவது:

விடுதலைப்புலிகளின் முகாம்கள் இருப்பதாக சிலர் கூறுவது வதந்தி பரப்பும் செயலாகத்தான் இருக்கும்.

போராளிகள் பயிற்சி முகாம் தமிழகத்தில் இருப்பதை அரசு விரும்பவுமில்லை அதனை அனுமதிப்பதாகவும் இல்லை.

இந்த நல்லெண்ண அணுகுமுறையைப் பயன்படுத்திக் கொண்டு பயிற்சி முகாம் பற்றிய தகவலை தமக்கோ அல்லது காவல்துறையினருக்கோ தொலைபேசி மூலம் தெரிவித்தால் அத்தகைய பயிற்சி முகாமை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

### தொடர்ந்தும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேதம் ஏற்பட்டுள்ளது.

கல்முனை, கல்குடா படை முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தீவிர தாக்குதலைத் தொடர்ந்து அப்படை முகாம்களிலிருந்த சிங்களப் படையினர் பின்வாங்கித்தப்பி ஓடிவிட்டனர்.

ஸ்ரீலங்கா இராணுவம் ஆகாயத்திலிருந்து விமானமூலமும், உலங்கு வானூர்தி (ஹெலிகொப்டர்) மூலமும் குண்டு வீசிப் பல இடங்களில் தாக்கி வருகின்றன. இதுதவிர கடலிலிருந்தும் சிங்களப் படை முகாம்களிலிருந்தும் பொதுமக்கள் வாழும் பகுதிகள்மீது எறிகணை (ஷெல்) தாக்குதல்களும் நடைபெறுகின்றன.

கல்முனை, வாழைச்சேனைப் பகுதிகளில் பல முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் பல வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மத்திய முகாமைச் (சென்றல்) சுற்றியுள்ள பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல பெண்கள் பலாத்காரப்படுத்தப்பட்டனர்.

கடந்த 10ம் திகதி மட்டக்களப்பிலுள்ள சிங்களக் காவல் துறையினர் முஸ்லிம் இளைஞர் ஒருவரைத் தாக்கிவிட்டு முகாமுக்குள் ஓடிவிட்டனர்.

அதுபற்றி விசாரிக்கச் சென்ற எமது போராளிகள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு, தவறுதலாக நடந்துவிட்டது என்றும் கூறியுள்ளனர். இதனைத் தொடர்ந்துஏற்பட்ட பிணக்கை அரசும் நாமும் பேசித் தீர்க்க இணக்கம் கண்டோம்.

ஆனால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முகாம்களிலிருந்த சிங்கள இராணுவம் தான்தோன்றித்தனமாக முகாம்களை விட்டு வெளியேறியபோது எமக்கும் சிங்களப் படைகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது.''

(153)

### வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதும் மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கன் பொலிஸ் நிலையத்தை விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கைப்பற்றினர்.

கிழக்கு மாகாணத்தில் கல்முனை, கிரான், களுவாஞ்சிக்குடி இராணுவ முகாம்கள் மீதும் விடுதலைப் புலிகள் தீவிர தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல்களினால் ஐந்து இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டார்கள். பத்துப்பேர் காயமடைந்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொலிஸ் நிலையங்களை மீண்டும் ஸ்தாபிப்பதற்குத் தேவையான படைப் பலத்தையும், இயந்திர சாதனங்களையும் பாதுகாப்புப் படையினர் வழங்கிவருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### யுத்தநிறுத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையே காரணமாகும் என்று விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் அமைச்சர் ஹமீத் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்திக் கொண்டிருந்த அதே நேரம் மட்டக்களப்பில் படைகள் குவிக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் அமைச்சர் ரஞ்சன் புலிகளை கிரிமினல் குற்றவாளிகள் என்றும் தலைவர் பிரபாகரனை பெருமாளோடு ஒப்பிட்டு பேசியதையும் விடுதலைப்புலிகள் கண்டித்துள்ளனர். 153

### 17 பொலிஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரப்படவில்லை.

1987-ம் ஆண்டு வடமராட்சிப் பகுதியில் நடைபெற்ற ஒப்பரேஷன் லிபரேஷனுக்கு தலைமை தாங்கிய இராணுவத்தளபதி கொப்பேகடுவ தலைமையிலான சிறிலங்கா இராணுவத்தினர் கிழக்கு மாகாணத்தில் நிலைகொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இந்த இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

புலிகள் தொடர்ந்து தம் மீது தாக்குதல் நடத்தினால் தாமும் கடுமையான தாக்குதலை நடத்துவோம் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கப்பற்படை, விமானப்படை போன்றவை இந்தத்தாக்குதலுக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக அந்த அதிகாரி கூறினார்.

விமானத்தாக்குதல் மூலம் தமிழ், முஸ்லீம் மக்களைக் கொல்ல வேண்டாமென்று விடுதலைப்புலிகள் அரசாங்கத்தை எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

## மரண அறிவித்தல்

### திரு. கந்தையா
(நெல்லியடி)

நெல்லியடி காளி கோவிலடியைச் சேர்ந்த திரு. கந்தையா (பிரபல மிருக வைத்தியர்) காலமானார். இவர் பாறுவதியின் அன்புக் கணவரும், பஞ்சாட்சரம் (முன்னாள் பொதுமுகாமையாளர், புலோலி ப. நோ. கூ. சங்கம்), அருணசலம் (C. W. E. கணக்காளர், கொழும்பு), முத்துக்குமாரு (காணிப் பிரிவு, கச்சேரி, யாழ்ப்பாணம்), கதிர்காமத்தம்பி (அஞ்சல் அதிபர். கொம்பனித் தெரு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதிகள் பூமாவதி பஞ்சாட்சரம் (ஆசிரியை, நெல்லியடி மெ. மி. பாடசாலை), யோகாம்பிகை முத்துக்குமாரு, இந்துமதி கதிர்காமத்தம்பி (ஆசிரியை, கொழும்பு இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயபாலன் (ஈழநாடு, யாழ்ப்பாணம்) சங்கீத்தா, சர்மிளா. அஞ்சன, ஜேகான் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (14-6-90) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு வதிரி ஆலங்கட்டை மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. பஞ்சாட்சரம்.

(சி-3839)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

### தமிழ்விழா ஒத்திவைப்பு
(கொழும்பு)

கொழும்பில் இம்மாதம் 15-ம், 16-ம் திகதிகளில் நடைபெறவிருந்த தமிழ்த்தினவிழா தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.